
மாலை: 52 ஜூன் 2010 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு




## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - கோவை

நாள்: 23-06-2010 - 27-06-2010



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.05.2010 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுகளுக்கு அவர்கள் மேல்நிலைப்பள்ளி தேர்வில் பெற்றிருந்த அதிகபட்ச மதிப்பெண்களின் அடிப்படையில் 90 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு முதன்மைச்செயலாளர் திரு. க.முத்துசாமி இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத் இ.ஆ.ப., மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். [செய்தி பக்கம்:33]



# திருக்கோயில்
திங்கள் இதழ்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு

நிறுவிய ஆண்டு: 1958
திருவள்ளுவர் ஆண்டு: 2041
வைகாசி - ஆனி
ஜூன் 2010
மலர்:52. இதழ்:6.

சிறப்பாசிரியர் (ம)
வெளியிடுவோர்
**திரு.ப.ரா. சம்பத்,** இ.ஆ.ப.,
ஆணையர்,
இந்து சமய அறநிலையத் துறை,
நுங்கம்பாக்கம்,சென்னை-600 034.

ஆசிரியர்
**தென்னம்பட்டு ஏகாம்பரம்,** எம்.ஏ.,

## சந்தா விபரம்

| | |
|---|---|
| தனி இதழின்விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டு சந்தா | ரூ.1000/- |
| ஆயுட்காலச்சந்தா | ரூ.1500/- |

[ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்]

## ஆணையர் அலுவலகம்
இந்து சமய அறநிலையத் துறை
119. உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம்,சென்னை-600 034.
தொலைபேசி எண்:
28334811/12/13
மின்அஞ்சல்
tn.endowments@gmail.com


## சிறப்பாசிரியர் பக்கம்

மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பேசப்பட்டு வரும் மொழி, இலக்கிய இலக்கண வளமிக்க மொழி, சிறந்த பண்பாட்டின் ஊற்றாய் விளங்கும் மொழி- நம் தாய்மொழியாம் தமிழ் மொழிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சியால் இந்திய அரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்தது.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னின்று நடத்தும் வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு, கோவை நகரில் 2010 ஜூன் 23-27வரை சிறப்பாக நடைபெற உள்ளது.



தமிழினத்திற்கு, தமிழ்மொழிக்கு ஆக்கம் தேடித்தரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டியது தமிழரின் தலையாயக் கடமையாகும்.

இந்து சமய அறநிலையத்துறையும் பண்டைய (கி.பி.600-900) பக்தி இயக்க காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவனைப் பாடிப்பரவிய தெய்வத் தமிழ் வழிபாட்டை -பக்தி மறுமலர்ச்சி யுகத்தை மீட்டுத் தருவதில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

சிதம்பரம், அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில் திருச்சிற்றம்பல மேடையில் பக்தர்கள் தேவாரத் திருமுறைகள் ஓதி வழிபட அரசாணை பிறப்பித்து செயல்படுத்தியது, வடலூரில் சத்திய ஞான சபைக்குள் நடைமுறையில் இருந்த புற வழிபாடுகளை அகற்றி வள்ளலார் வகுத்த ஜோதி வழிபாட்டிற்குரிய தலமாக மீட்டெடுத்தது, நூலகங்கள் நிறுவி திருக்கோயில்களை அறிவாலயங்களாக மாற்றியது, அருளாளர்களுக்கு விழாக்கள், தமிழில் அருச்சனை வழிபாடு, திருக்கோயில்களில் திருப்பணிகள், குடமுழுக்கு விழாக்கள் என அளப்பரிய சாதனைகள் புரிந்து, ஆன்மிக சான்றோர்கள் பாராட்டும் வகையில், அறநிலையத்துறை செயலாற்றிவருகிறது.

கடந்த 13.05.2010 அன்று சட்டமன்றத்தில் நடைபெற்ற அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், வரும் 2010-2011ஆம் ஆண்டின் இலக்காக இத்துறை மேற்கொள்ளவுள்ள வளர்ச்சிப்பணிகள், திருப்பணிகள் குறித்து அறிவித்த அறிவிப்புகள் வாசகர்களின் பார்வைக்கு இவ்விதழில் வெளியிட்டுள்ளோம்.

மேலும், இவ்விதழில் சான்றோர் சிந்தனை, நீதிக்கதை, தலவரலாறு, ஆன்மிக கட்டுரைகள் என கருத்துச்செறிவுமிக்க அறிஞர் பெருமக்களின் படைப்புகள் வெளியாகியுள்ளன.

வாசகர் பெருமக்கள் தொடர்ந்து நல் ஆதரவினை வழங்கிட அன்புடன் வேண்டுகிறோம்.

ப.ரா. சம்பத்
[ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,]
ஆணையர்

# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு




## மாநாட்டு இலச்சினையின் முக்கியத்துவம்

### மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

### டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி

தமிழ்மொழியின் மேம்பாட்டிலும், அதன் பெருமையையும், கவுரவத்தையும் மீட்டெடுப் பதிலும் மாபெரும் சாதனையாக தமிழ் மொழியைச் செம்மொழி என்று மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அறிவித்து, அறிவிக்கை செய்வதில் நாம் கண்ட வெற்றி, சென்னையில் செம்மொழி தமிழ் ஆய்வு மத்திய நிறுவனத்தை அமைப்பதில் நாம் வெற்றி பெற்று நாடு மற்றும் சர்வதேச அளவில் புகழ்பெற்ற அறிஞர்களுக்கு இந்தியக் குடியரசு தலைவரின் 'குறள்பீட விருது' 'தொல்காப்பியர் விருது' ஆகியவற்றை வழங்க வழிவகுத்தது. ஆகியவற்றை அடுத்து முதல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்துவது பொருத்தமாக இருக்கும் என்று நாம் கருதினோம்.

கோவை மாநகரில் மிகச் சிறப்பான முறையில் 2010 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 முதல் 27வது நாள் வரையில் ஐந்து நாட்களுக்கு அம்மாநாட்டை நடத்துவது என்று முடிவு செய்தோம்.

**மாநாட்டு இலச்சினையின் முக்கியத்துவம்**

முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கருத்தையேற்று, கோவையில் 2010 ஜுன் திங்கள் 23ஆம் நாள் முதல் 27ஆம் நாள் வரை நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான இலச்சினை (LOGO) உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த இலச்சினை 23-10-2009 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் நிதி அமைச்சர் பேராசிரியர், துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், செய்தித்துறை அமைச்சர் பரிதி இளவழுதி, பேராசிரியர் வா.செ.குழந்தைசாமி, தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன், தலைமைச் செயலாளர் கே.எஸ்.ஸ்ரீபதி, நிதித்துறை முதன்மைச் செயலாளர் கு.ஞானதேசிகன், உலகத் தமிழச் செம்மொழி மாநாட்டின் தனி அலுவலர் க.அலாவுதீன், தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகத் துணை வேந்தர் முனைவர் ம.இராசேந்திரன், தமிழ் வளர்ச்சித் துறை செயலாளர் ஜி.முத்துசாமி, செய்தித்துறை இயக்குனர் சி.காமராஜ், செம்மொழித் தமிழ் ஆய்வு மத்திய நிறுவன பொறுப்பு அலுவலர் க.இராமசாமி ஆகியோர் முன்னிலையில் வெளியிடப்பட்டது.

**அய்யன் திருவள்ளுவர் திருவடிகளில் சுனாமி அலைகள் சுருளும் அழகிய பின்னணி**

தமிழ் மொழி, செம்மொழியாக அறிவிக்கப் பட்டபின் நடத்தபெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்காக வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கும் இந்த இலச்சினை பல்வேறு சிறப்புகளைக் கொண்டுள்ளது.

கடல் கோள்களை எதிர்கொண்டும், கால

வெள்ளத்தைக் கடந்தும் சீரிளமைத் திறத்தோடு தமிழ் மொழி திகழ்கிறது என்பதைக் குறிக்கும் வகையில் சுனாமி அலைகளும், அய்யன் திருவள்ளுவர் திருவடிகளில் சுருளும் அழகிய பின்னணியில் இலச்சினை உருவாக்கப் பட்டுள்ளது.



வழக்கமாக, தத்துவ விளக்கங்களுக்கேற்ப மூன்று விரல் முத்திரைகளைக் கொண்டு சிலைகள் வடிவமைக்கப்பட்டிருக்கும். ஆனால், திருவள்ளுவர் சிலையோ அறம்,பொருள்,இன்பம் எனும் முப்பாலைக் குறிப்பிடும் வகையில் மூன்று விரல்களுடன் அமைக்கப் பட்டுள்ளது. திருவள்ளுவரைச் சுற்றியுள்ள மேல் வட்டத்தில் உலகத் தொன்மையான நான்கு நாகரிகங்களில் ஒன்றாகக் கருதப்படும் திராவிட நாகரிகமாகிய சிந்துவெளி நாகரிகச் சின்னங்களும் குறியீடுகளும் இடம்பெறுகின்றன.

சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் செழித்து வளர்ந்த நகர்மய நாகரிகம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது. சிந்து நதிக் கரையில் *1500* ஏக்கர் பரப்பளவில் செழித்தோங்கி *700* ஆண்டுகள் சிறந்து விளங்கியது சிந்துவெளி நாகரிகம். அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட சிந்துவெளிச் சின்னங்களுடன் கூடிய குறியீடுகள்– எழுத்துப்பொறிகள், தமிழகத்தின் கொங்குமண்டலச் சூலூர், விழுப்புரம் அருகில் கீழவாளை, சோழமண்டலத்தில் மயிலாடுதுறை, செம்பியம் கண்டியூர் ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன.

படகும், கப்பலும் தமிழர்கள் திரைகடலோடித் திரவியம் தேடி திறன் மிகு வரலாற்றையும், காளைச்சின்னம் தமிழர்களின் வேளாண்மைத் தொழில் சிறப்பையும் வெளிப்படுத்துகின்றன.


இலச்சினையில் ஏழு குறியீடுகள்/ சின்னங்கள் இடம் பெறுகின்றன. ஏழு என்பது தமிழர்களுக்குரிய கணக்கீட்டு முறையில் சிறப்பான எண்ணாகும். ஏழு நாட்கள், அகப்பொருள் திணைகள் ஏழு, புறப்பொருள் திணைகள் ஏழு, திருக்குறள் *133* அதிகாரங்கள், அறத்துப்பாலில் பாயிரவியல் தவிர *34* அதிகாரங்கள், பொருட்பாலில் *70* அதிகாரங்கள், காமத்துப்பாலில் *25* அதிகாரங்கள், இவற்றின் கூட்டுத் தொகை ஏழு எனும் எடுத்துக்காட்டுகள் ஏழின் சிறப்பை விளக்கிச் சொல்லும். ஏழு என்பது 'எழு' என்பதாகவும் 'எழுபதில்' இடம்பெறும். இலக்கை எட்டுவதற்கு எழுவது/ 'எழு' என்பதாகவும் அமைகிறது.

இந்த மாநாட்டின் எடுத்துரைக் குறிப்பாக "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது அமைந்துள்ளது. ஓலைச்சுவடியில் இடம்பெற்றுள்ள எடுத்துரைக்குறிப்பு, இன்றைய உலகத்திற்குத் தமிழ்ச் செம்மொழி வழங்கும் கொடையாகக் கருதத்தக்கது.

இன்றைய உலகின் தேவை நல்லிணக்கம்; சாதி, மதம் கடந்து மக்கள் மனநிறைவோடு வாழும் மனித நேயம் செறிந்த வாழ்க்கை; இதற்குத் தேவை வேறுபாடற்ற உலகம். ஏற்றத்தாழ்வற்ற உலகம் அமைய இந்தியா உலகிற்கு அளிக்கும் கருத்துக் கொடை "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதாகும். இச்சிந்தனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச் செம்மொழி தரணிக்கு வழங்கிய கொடையாகும்.

## இதழின் உள்ளே..


| | | |
|---|---|---|
| 1. பெரியோர்கள் யார்? | –பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் | 6 |
| 2. கண்ணன் ஏன் வரவில்லை? | –ஸ்வாமி | 8 |
| 3. குரங்கு அணில் காகத்திற்கு அருள் தந்த சிவன் | –பனையபுரம் அதியமான் | 12 |
| 4. அரசனின் வைரமோதிரம் | –தென்கச்சி கோ.சுவாமிநாதன் | 15 |
| 5. இந்து சமய அறநிலையத்துறை மானிய கோரிக்கை எண்.47 2010–11 அறிவிப்புகள் | –திரு.கேஆர்.பெரியகருப்பன் மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் | 17 |
| 6. திருக்கோயில் வழிபாட்டுமுறை | –முனைவர்.அருணை பாலறாவாயன் | 27 |
| 7. உலகம் உய்ய உதித்த உடையவர் | –பெ.ராமநாதபிள்ளை | 30 |
| 8. அறிவே ஜோதி | –மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் | 35 |
| 9. மானிடப்பிறவி | –தென்னம்பட்டு ஏகாம்பரம் | 38 |


அருள்மிகு அரங்கநாத சுவாமி, திருவரங்கம்

பிரார்த்தனை

# நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
# தொண்டரடிப்பொடி ஆழ்வார்

## அருளிய திருமாலை

(திருமாலின் மீது தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிச் செய்த நூல் "திருமாலை". 'திருமாலை அறியாதார் திருமாலை அறியாதார்' என்பது பழமொழியாகும். திருமாலை என்கிற இந்த நூலைப் படித்தால் திருமாலின் முழுமையான குணாதிசயங்களை அறிந்துகொள்ளலாம் என்பதால் இப்பழமொழி வழங்குகிறது. அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பாடல்களை இங்கே தருகிறோம்.)

பச்சை மா மலை போல் மேனி, பவளவாய், கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர் தம் கொழுந்தே! என்னும்
இச் சுவை தவிர, யான் போய் இந்திரலோகம் ஆளும்
அச் சுவை பெறினும் வேண்டேன், அரங்க மா நகருளானே!



வேத நூற் பிராயம் நூறு மனிசர் தாம் புகுவரேலும்,
பாதியும் உறங்கிப் போகும்: நின்றதிற் பதினையாண்டு
பேதை பாலகன் அது ஆகும்; பிணி பசி மூப்புத் துன்பம்;
ஆதலால், பிறவி வேண்டேன்; அரங்க மா நகருளானே!


குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கிக்
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு
உடல் எனக்கு உருகுமாலோ! என் செய்கேன் உலகத்தீரே?

ஊர் இலேன், காணி இல்லை, உறவு மற்று ஒருவர் இல்லை;
பாரில் நின் பாத மூலம் பற்றிலேன்; பரம மூர்த்தி!
காரொளி வண்ணனே! என் கண்ணனே! கதறுகின்றேன்;
ஆர் உளர்? களைகண் அம்மா! அரங்க மா நகருளானே!

மனத்தில் ஓர் தூய்மை இல்லை, வாயில் ஓர் இன்சொல் இல்லை;
சினத்தினால் செற்றம் நோக்கித் தீவிளி விளிவன்; வாளா
புனத்துழாய் மாலையானே! பொன்னி சூழ் திருவரங்கா!
எனக்கு இனிக் கதி என் சொல்லாய்? என்னை ஆளுடைய கோவே!

சான்றோர் சிந்தனை

# பெரியோர்கள் யார்?



பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்

இன்று பெரியோர்கள் என்று சொன்னால், வயது முதிர்ந்தவர்கள், பெரும் பணக்காரர்கள், பெரும் பதவியிலிருப்பவர்கள் என்ற அளவோடு அச்சொல்லின் பொருள் முடிந்துவிடுகிறது. இந்தப் பொருளில் இந்தச் சொல்லை நான் இங்குப் பயன்படுத்தவில்லை.

'செயற்கு அரிய செய்வார் பெரியர்' என்றுதான் பெரியோர்களுக்கு இலக்கணம் வகுக்கிறான், வள்ளுவன். செயற்கரிய செயல் என்றால் என்ன? நூறு கிலோ கிராம் கனத்தை நம்மால் தூக்க முடியாது. அதனை ஒருவர் தூக்கினார் என்றால், நம் போன்றவர்களுக்குச் செயற்கரிய செயல்தானே அது? ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்தில் முதற் பரிசு பெற்றவர், ஏனையோர் செய்தற்கு அரிய செயலைச் செய்தார் என்பதில் ஐயமில்லை. அப்படியானால், பளுத் தூக்கினவரையும் ஓட்டப் பந்தயத்தில் முதலில் வந்தவரையும் செயற்கரிய செய்தவர்கள் என்று கூறலாமா? இல்லை.

தமிழர்கள் இவ்வாறு நினைத்ததில்லை. உடற் பயிற்சியின் மூலமும், உடல் வளர்ச்சியின் மூலமும் எவ்வளவு அரிய காரியத்தைச் செய்தாலும், அதனை நம் முன்னோர் செயற்கரியது என்று சொல்வதில்லை. அப்படியானால் செயற்கரிய என்ற சொல்லின் பொருள் என்ன?

'கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்; கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்; ஒரு சிங்கம் முதுகின் மேல் கொள்ளலாம்...... வேறொருவர் காணாமல் உலகத்து உலாவலாம்' (தாயு: தேசோ:8) என்று வரிசைப்படுத்தித் தாயுமானவர் கூறுவதைச் 'செயற்கரிய' என்ற சொல்லால் குறிப்பிடலாமா என்றால், அல்ல என்கிறார் அவர். இவை கூடச் செயற்கரிய செயல்கள் அல்ல என்றால், வேறு எதைத் தான் செயற்கரிய செயல் என்று கூறுவது? இந்தச் சந்தேகத்திற்குத் தாயுமானவப் பெருந்தகையே இதே பாடலில் விடை கூறுகிறார். இவையெல்லாம் மிகச் சாதாரணச் செயல்கள் என்று கூறிய அப்பெரியவர், எது செயற்கரிய செயல் என்ற வினாவிற்கு விடை கூறும் முகமாகச் 'சிந்தனையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறன் அரிது' என்று கூறுகிறார்.

செயற்கரிய செயல் எது என்று தேடித் திரிந்த நமக்குத் தாயுமானவப் பெருந்தகை விடை கூறிவிட்டார். நம் உடலுடன் பிறந்த ஐம்பொறிகள், இந்தப் பொறிகளை ஆட்டுவிக்கும் மனம் என்பவை ஒரு கணம் கூட நம் வசத்தில் இல்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமானால், அவை நம்மை இழுத்துச் செல்கின்றன. ஐம்பொறிகள், மனம் என்பவற்றின் அடிமையாகவே நாம் இருந்து விடுகிறோம். பொறிகளையும் மனத்தையுமே அடக்க முடியாத நமக்கு அந்த மனத்தின் அடித்தளத்தில்

இருக்கும் சிந்தையை எவ்வாறு அடக்க முடியும்?

மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்ற அந்தக்கரணங்கள் நான்கில் மனமே இரண்டு நிலைகளில் உள்ளது. மேல்மனம், கீழ்மனம் என்ற இரண்டையும் அடுத்துச் சிந்தையும் இரண்டு நிலைகளில் உள்ளது. மேல்சித்தம்,(Consciousness) அடிச்சித்தம். (Deeper Consciousness) எனவே, இந்த வேறுபாட்டை அறிந்துதான் தாயுமானவப் பெருந்தகை மனத்தை அடக்கி என்று கூறாமல், 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறன் அரிது' என்கிறார். யோகப் பயிற்சியின் மூலம் மனத்தை அடக்கி, ஒருநிலைப்படுத்தப் பழகியவர்கள் உண்டு. அந்த ஒரு நிலைப்படுத்திய நேரத்தில், பொறிபுலன்கள் செயலற்று நின்றுவிடும். மெஸ்மரிஸம், ஹிப்னாடிஸம் போன்ற வற்றைச் செய்கின்றவர்கள், இந்த மனத்தை ஒருநிலைப்படுத்தும் பயிற்சியில் நன்கு தேறியவர்கள். ஆனால், இவர்கள் கூடச் சிந்தையை அடக்கக் கற்றதில்லை. காரணம், சிந்தை மனத்தைப் போல் நம்முடைய அதிகார எல்லைக்குட் பட்டதன்று. அதனால், பயிற்சி மூலம் அதனை ஒன்றும் செய்துவிட முடியாது. அப்படியானால் வேறு வழியென்ன?

சில பொருள்களைப் பெற வேண்டுமானால் சிலரிடம் தான் செல்ல வேண்டும். இது உலக நியதி. இதையே சற்று நீட்டினால், சிந்தை அடக்கும் செயலை யாரிடம் எங்கே பெறுவது என்ற வினாவிற்கு விடை கிடைக்கும். ஒவ்வோர் உயிருள்ளும் அந்தர்யாமியாய் உறைகின்ற இறைவனை வேண்டிக் கொள்வது தவிர, வேறு வழியில் இதனைப் பெறவே முடியாது. அதாவது, சிந்தையை அடக்க வேண்டும் என்றால், அதற்குள்ள ஒரே வழி, இறைவன் திருவருளை நாடுவது தான். அப்படி நாடுவதற்கு கூட அவன் அருள் வேண்டும் என்பதையே அனுபவ ஞானியாகிய மணிவாசகர் 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' (திருவாச: சிவ புராண–18) என்கிறார். அப்படி வணங்கினால் என்ன கிடைக்கும்? சிந்தை அடங்கும்; அது அடங்கினால் அந்த இடத்தில் யார் இருப்பார்கள்? இவ்வினாவிற்கு விடையாக மணிவாசகப் பெருமானே 'சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்' (திருவாச: சிவபுராண–17) என்று பாடுகிறார்.

ஆக, சிந்தை அடங்கினால் சிவன் அந்த இடத்திற்கு வந்து தங்குவான். மூலப் பொருளே நம் சிந்தைக்குள் வந்து விட்டதால் நாம் எதனையும் செய்ய முடியும்; ஏனையோர் கற்பனையிற்கூட நினைக்க முடியாத செயல்களைச் சிந்தனையை அடக்கியவர்கள் அனாயாசமாகச் செய்ய முடியும். இத்தகைய ஆற்றல்கள் பெற்றவர்களையே வள்ளுவப் பேராசான் 'செயற்கரிய செய்வார்' (குறள்:26) என்று கூறுகிறார்.

இவ்வாறு கூறியவுடன் காஷாயம் உடுத்திக் கொண்டு, தாங்களே ஞானத் தலைவர்கள் என்று சொல்லித் திரிகின்றவர்களை மனத்தில் நினைக்க வேண்டா. இவர்கள் பெரியவர்களும் அல்லர்; செயற்குரிய வற்றைக்கூட இவர்கள் செய்கிறார்களா என்பது ஐயத்திற்குரியது.

பெரியர் என்று வள்ளுவர் குறிப்பிடுவது ஒருவர் உருவத்தையோ, உடையையோ, பதவியையோ வைத்து அன்று. இந்தப் பெரியவர்கள் கோவணம் மட்டுமே அணிந்திருந்தாலும், எப்பொழுதும் சிரித்துக் கொண்டே இருப்பர். எந்த ஆசாபாசங்களும் இவர்களைப் பற்றுவதில்லை. விருப்பு – வெறுப்பு, சுகம் – துக்கம், சூடு – குளிர்ச்சி என்ற இரட்டைகளை வென்ற இவர்களைச் சமதிருஷ்டி உடையவர்கள் என்று கீதை கூறுகின்றது. 'சேய்போல் இருப்பர் கண்டீர் சிவஞானிகளே' என்கிறார் பட்டினத்தார். இந்த இடத்தில் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மேலே கூறியவற்றைப் பார்த்து விட்டு, பெரியோர் என்பவர்கள் துறவிகளாக உலக வாழ்க்கையில் ஈடுபடாதவர்களாக இருப்பர் என்று தயை கூர்ந்து யாரும் நினைத்துவிட வேண்டா.

காலை முதல் மாலை வரை இலக்கியப் பிரச்சினை, தொழிலாளர் பிரச்சினை என்பவற்றிலேயே பெரும் பொழுதைச் செலவழித்த தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களும், பன்மொழிப் புலமை, பல்கலைப் புலமை என்பவற்றை அனாயாசமாகப் பெற்று வாழ்ந்த குருதேவர் தெ.பொ.மீ., அவர்களும், இந்தப் பெரியோர் பட்டியலில் அடங்குவர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியர்களில் ஒரு சிலரே பெறக்கூடிய பெரும் பதவியை வகித்த மகாகனம் (Rt. Hon)சீனிவாச சாஸ்திரியார் அவர்களும் இப்பெரியோர் பட்டியலில் இடம் பெறுபவர் ஆவர். 'சித்து' என்ற பெயரில் யட்சிணி வித்தைகள் செய்கின்ற இக்காலச் சமயவாதிகள் போல் அல்லாமல், அட்டமா சித்திகளையும் போகிற போக்கில் செய்த யாழ்ப்பாணம் யோக சுவாமிகளும் இப்பட்டியலில் இடம் பெறுபவரே ஆவர்.

முடிவாகக் கூற வேண்டுமேயானால் – சிந்தையை அடக்கி, சிவனருளை முழுதாகப் பெற்ற இவர்கள் ஆண்டியாகவும் திரியலாம்; அரசராகவும் இருக்கலாம்.

(பேராசிரியர் அ.ச.ஞா.அவர்களின் 'நான் கண்ட பெரியவர்கள்' எனும் நூலிருந்து...)

# கண்ணன் ஏன் வரவில்லை?

**ஸ்வாமி**



**ஏன் வரவில்லை:**

நம் வீட்டு நிகழ்ச்சிக்கு முக்கியமான ஒருவர் வரவில்லையேல் கேட்போமே, அப்படிப்பட்ட கேள்வியிது. அதுவும் மிக முக்கியமான வேளையில் வரவில்லை என்றால் இந்தக் கேள்வி எழத்தானே செய்யும்?

வராத முக்கியமானவர் ஸ்ரீகிருஷ்ணர். அந்த முக்கியவேளை சூதாட்டம் நடந்தபோது, துரியோதனனுக்கும் தருமருக்கும் நடந்த சூதாட்டம்.

துரியோதனனுக்கு வேண்டியவர் எல்லாரும் வந்திருந்தனர். சகுனி ஆட, துரியோதனன் பணயப் பொருள் வைத்தான்.

பாண்டவர்க்கு நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளும், எவர் இல்லாமல் எதையும் பாண்டவர் செய்ய மாட்டாரோ அவர், அந்த ஆபத்பாந்தவன் கண்ணபிரான் சூதாட்ட சமயத்தில் பாண்டவர்க்குப் பக்கத்தில்லையே. கண்ணன் ஏன் வரவில்லை?


**அழைப்பில்லை**

தருமர் சூதாடப் போவதைச் சொல்லவே இல்லை. மரியாதை நிமித்தமாகக் கூடச் சொல்லவில்லை. எப்படி அவர் வருவார்? அழையாத விருந்தாளியாகப் போக முடியுமா?

எப்போதும் எந்த முக்கிய நல்ல - கெட்ட நிகழ்விலும் பாண்டவர்க்குக் கண்ணனே துணை. மேலும் கண்ணபிரானுடைய அத்தை குந்தி, அவளுடைய பிள்ளைகள் பாண்டவர்கள். இந்திரப் பிரஸ்தம் பிரிக்கப்பட்டு தருமருக்குத் தரப்பட்ட போது மகுடம் சூட்ட அழைக்கப் பட்டார். காண்டவ வனத்தை அக்கினிக்கு இரையாக்கியபோது துணை இருந்தார். தோழனாக விளங்கிய அர்ஜுன னுக்குத் தம் தங்கை சுபத்திரையைத் தூக்கிச் சென்று மணக்கத் தந்திரம் செய்து உதவினார்.

தருமர் துவாரகைக்கு ஆளனுப்பி கண்ண பிரானை வரச் சொல்லி தாம் சக்கரவர்த்தியாக வேண்டும் என்ற விருப்பத்தைச் சொல்லி, அதை ஸ்ரீகிருஷ்ணர் மூலம் சாதித்துக் கொண்டார். ராஜசூய யாகம் செய்தார்.

இப்படி ஒவ்வொன்றிற்கும் கிருஷ்ணரை நாடி அவர் ஆலோசனைப்படி எல்லாம் செய்து அரசியலிலும் வாழ்விலும் முன்னுக்கு வந்த பாண்டவர்கள் சூதாடச் சென்றபோது கண்ண பிரானிடம் ஆலோசனை பெறாதது இருக்கட்டும். சும்மா வேடிக்கை பார்க்கக்கூட 'வாரும்' என அழைக்கவில்லை. தருமர் இருக்கட்டும், அவருடைய உயிர்த் தோழன் அர்ஜுனனாவது எங்கே, எதற்குப் போகிறோம்? என்று தகவலாவது



சொல்லி இருக்க வேண்டாமா?

**கண்ணன் வந்திருந்தால்**

ஸ்ரீகிருஷ்ணர் அருகில் வந்திருந்தால் சூதாட்டம் தவறு என்று ஆடவிடாமல் தடுத்திருப்பார். இல்லையேல் என்ன மாயம் செய்தாவது சகுனியின் வஞ்சனையை வென்று சூதாட்டத்தில் வெற்றி பெறச் செய்திருப்பார்.

'எனக்குப் பதில் சகுனி ஆடுவார்' என்று துரியோதனன் சொன்னபோது, 'எனக்குப் பதில் கிருஷ்ணர் விளையாடுவார்' என்று தருமர் சொல்லியிருக்கலாம். கிருஷ்ணரை சகுனியால் வென்றிருக்க முடியுமா?

தோற்றே இருந்தாலும் கௌரவர், பாண்டவர்க்கும் திரௌபதிக்கும் அவ்வளவு அவமானம் செய்திருக்க முடியுமா?

பீஷ்மர், துரோணர், திருதராட்டிரன், விதுரன், அச்வத்தாமா, கர்ணன் முதலியோரும் பிற மன்னர்களும் சபையில் இருந்தபோது ஸ்ரீகிருஷ்ணர் ஒருவரும் இருந்திருக்கலாமே? இந்தப் பொறுப்பு தருமரையல்லவா சாரும்?

**தத்துவம்**

தருமரல்லவா ஸ்ரீகிருஷ்ணரை அழைத்திருக்க வேண்டும்? அழைக்காததால் தானே தோல்வி? எல்லாம் இழந்து பெற்றது அவமானம்தானே. திரௌபதியல்லவா, அசிங்கப்படுத்தப்பட்டாள்? ஐந்து ஆற்றல் மிக்க கணவர்கள் இருந்தும், அந்த திரௌபதி, ராஜமாதா, மஹாராணி ராஜசூயத்தில் அபிஷேகம் செய்யப்பட்ட கூந்தலரசி, அக்கினியிலிருந்து வந்தவள், தலை மயிரைப் பிடித்து இழுத்து வரப்பட்டு, தீட்டாக ஒற்றையாடையுடன் இருந்தபோது நடுச்சபையில் கொடூரமாக நடத்தப்பட்டுத் தகாத வார்த்தைகளால் பழிக்கப்பட்டாளே, பார்த்தன் முதலானவர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருந்தனரே, இதற்குக் காரணம் யார்? துரியோதனன் தானா? தருமரா? எது அந்த மாவீரர்களின் கைகளைக் கட்டிப் போட்டிருந்தது? திரௌபதியின் மணாளர்களின் மனத்தை எவர் வைத்த சூநியம் மயக்கி விட்டிருந்தது?

இது எதை அறிவுறுத்துகிறது?

'ஐந்து புலன்கள், அவற்றை அனுபவிக்கும் ஒரே மனம், நூற்றுக்கணக்கான உலக விஷயங்களுடன் சூதாட்டம் போன்ற வாழ்க்கையை நடத்தப் போகின்றன.

விவேகம் என்ற ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுடன் சென்ற போதெல்லாம் வெற்றியடைந்தன. அவரை விட்டு விட்டுத் தனியாகச் சென்று சூதாடியபோது தோல்வி அடைந்தன. ஐம்புலன்கள் எதுவும் செய்ய முடியாதிருந்தபோது அந்த மனம் அசிங்கப்பட்டது. அலறித் துடித்தது. இதைத் தானே சூதாட்ட நிகழ்ச்சி சுட்டிக் காட்டுகிறது?

இன்னொரு வைணவ சம்பிரதாய சமாசாரம் உண்டு.

**அஹங்காரம்**

வாழ்க்கையில் முன்னேற உதவியவர்களை, முக்கியமான பெரியவர்களை ஒதுக்கிவிட்டு நன்றியில்லாமல் நடந்து அஹங்காரத்தால் அவமதிப்பவர் உண்டு என்றும் காட்டும்.

இந்த அஹங்காரம் பகவதாபசாரம், பாகவதாபசாரம் எல்லாம் சேதநர் (நம் போன்ற ஜீவர்) செய்யக் காரணமாகிவிடும். இது கொடிய பாவமாகி நமது துன்பங்களுக்குக் காரணமாகிவிடும்.

எப்படி எனில், காக்கும் இயல்பினன் கடவுளான திருமால். அவனுடன் ஜீவரான நமக்கு நவவித சம்பந்தமுள்ளது. அதில் அவன் காப்போன் – நாம் காக்கப்படுவோர். இதனால் நம் அனைவரையும் காப்பாற்றவே துடிக்கும் இறைவனுக்கு இசைந்து நடக்க வேண்டியதொன்றே நம் கடமை. ஆனால், சுயேச்சையாக நாமே நம்மைக் காக்க முயற்சி செய்வதே நம்மை அவன் காக்க முடியாமல் நடப்பதாகும். எப்படியெனில், குழாயில் தண்ணீர் வருகிறது, குடத்தை நாம் கவிழ்த்து வைத்திருந்தால் தண்ணீர் நிறையுமா? குழாயில் வரும் நீர் போல பகவான் கிருஷ்ணன்.

சாக்கடையில் விழுந்துவிட்ட ஒரு மாட்டைத் தூக்கி நாம் காப்பாற்ற முயலும்போது, 'நம்மை ஏதோ கேடு செய்து துன்பம் தருகிறார்கள்," என்று அது முரண்டுவது போல இறைவனுக்கு எதிராக நடப்பது தப்பாகி விடுகிறது.

இப்படியே தருமர் நடந்து கொண்டார். அவருடைய அஹங்காரத்தால் பகவதாபசாரம், பாகவதாபசாரம் இரண்டு பாவமும் அவரால் செய்யப்படும் நிலைக்கு ஆளானார். தாமும் துன்பப்பட்டு தம்மைச் சேர்ந்தாரையும் துன்பத்தில் ஆழ்த்தினார்.

பகவதாபசாரம்

பிரஹலாதனுடைய தந்தை இரணியன் இந்த இரண்டு குற்றங்களையும் செய்தான். பகவானான தன்னைப் பழித்து பகவதாபசாரம் செய்தான். அதைக் கூட அவர் பொறுத்திடுவார். பாகவதாபசாரமான அடியார்களிடம் குற்றம் செய்வதைப் பகவான் பொறுக்க மாட்டார்.

தருமர் பகவானிடம் சொல்லாமல் அவரை அழைக்காமல் சூதாடச் சென்றதே சுயேச்சையாக எடுத்த முடிவு. இது சொரூப நாசமாகும்.

பரமாத்மாவின் சரீரமாக ஜீவாத்மா இருப்பதால் பகவானுடைய உடமைப் பொருள் நாமெல்லாரும்; தருமரும்கூட. 'பகவானின் அடிமை' (தாசன்) என்பதே நம் ஸ்வரூபம். இதை மீறுவதாக தருமர் தாமே தம்மை க்ஷத்திரிய குலத்தைத் தம்மாலேயே காக்க முடியும் என்பது போலச் செயல்பட்டார். 'பகவானின் அடிமை' என்ற பாரதந்த்தீய சொரூபத்தை அவர் அழித்ததாகுமிது. சுதந்திரமாகச் செயல்பட்டார். இது வம்பாகிப் போனது. ஏனெனில் பகவானிடம் குற்றம் செய்ததாயிற்று.

ராஜசூயயாகம் முடிந்ததும் ஜோசியரை தருமர் பார்த்தார். பிறகு வியாசரைக் கலந்தார். தீய சகுனங்கள் ஏற்பட்டனவே. பகவான் யாக வேளையில் சபையில் சிசுபாலனை வதைத்ததுடன் தீர்ந்து விட்டனவா? என்று கேட்டார். "இல்லை; வரும் பதின்மூன்று ஆண்டுகளுக்கு உனக்கு நன்றாக இல்லை; உன்பொருட்டு கௌரவர் – பாண்டவரிடையே பெரிய போர் மூளும். க்ஷத்திரிய குலமே அழியும்," என்றார். உடனே தருமர், 'நாம் யார் எது கூறினாலும் விரோதமாக நடப்பதில்லை,'' என்று தீர்மானம் செய்து கொண்டார்.

பலசாலிகளான தம்பிகளை அழைத்து, ''எனக்கு நான் எது செய்தாலும் ஒத்துழைப்பவராக அடங்கியிருக்க வேண்டும்,'' என்று சத்தியம் வாங்கிக் கொண்டார்.

இச்சமயத்தில் தருமரை புதிய மண்டபத்தைப் பார்க்க என்று திருதராஷ்டிரர் பெயரில், விதுரரை அனுப்பி கௌரவர் அழைத்தனர். 'பீஷ்மர், துரோணர் முதலிய பெரியவர்களின் முன்னிலையில் சூதாடியும் மகிழலாம்," என்று சொல்லி விட்டனர். தருமர் போரைத் தவிர்க்க எண்ணியதால் மறுப்பு சொல்லாமல் சென்றார். சூதாடினார், பணயம் வைத்தார், தோற்றார். திரௌபதி, 'தான் அடிமையாகவில்லை' என்று தர்க்கம் செய்தது மேலும் சிக்கலாக எல்லா அவமானமும் ஏற்பட்டன. கொதிப்படைந்தும் பாண்டவர், அண்ணாவும் சக்கரவர்த்தியும் ஆன தருமருக்கு அடங்கிச் சும்மா இருந்தனர். தம் பொருட்டு போர் மூளாதிருக்கவே தருமர் சும்மா இருந்தார்.

பகவான் அவதரித்த நோக்கம் துஷ்ட நிக்ரஹ பரிபாலனம். போரை உண்டாக்கி அசுராவேசம் கொண்ட அரசர்களை அழிப்பது. இந்த பகவானுடைய சங்கல்பத்திற்கு எதிராக தருமர் தீர்மானித்து நடந்தார். இது பகவதாபசாரம். மேலும் தம் க்ஷத்திரிய தர்மத்தைக் கைவிட்டு பிராமண தர்மத்தைக் கையாண்டார். 'பொறுமை'யைக் கடைப்பிடித்தார். கடைசியில் போருக்கு முன்கூட, அதைத் தவிர்க்க ஐந்து கிராமம், ஐந்து ஊர், ஐந்து வீடு கொடு, என்று பிராமணரைப் போலப் பிட்சை கேட்டார். 'பொறுமையும் யாசகமும் அரச தருமமில்லை.

பாகவதாபசாரம்

திரௌபதி பகவானைச் சரணாகதி செய்திருந்த பக்தை. எப்போது திரௌபதிக்கு என்ன துன்பம் உண்டானாலும் உடனே வந்து உதவி செய்பவன் கண்ணன். துருவாசருடன் நூறு பேரை துரியோதனன், திரௌபதி இருந்த வனத்திற்கு அனுப்பினான். அவளோ சாப்பிட்டு விட்டதால் அட்சய பாத்திரம் எதுவும் தராத சமயம், துருவாசர் பசியில் உணவு அளிக்கா விட்டால் சபித்து விடுவாரே. கண்ணனை நினைத்தாள் திரௌபதி. உடனே வந்த கண்ணன் பாத்திரத்தில் இருந்த கீரைத் துணுக்கு, பருக்கையை உண்டு துர்வாசர் சீடருடன் வயிறு நிறையச் செய்து காத்தார்.

இப்படிப்பட்ட பாகவதையை கௌரவர் சபையில் அவமானகரமாக நடத்தியதைப் பாண்டவர் பார்த்துக் கொண்டிருந்தது பாகவதாபசாரமாகும். அக்கினி முன் 'காப்பாற்றுவேன்' என்று உறுதி பூண்டு மணந்து கொண்ட மனைவி – சஹதர்மசாரிணீயைத் துன்பத்தில் விட்டுப் பார்த்துக் கொண்டது

பாகவதாபசாரம்.

கிருஷ்ணர் ஏன் அவதரித்திருந்தாரோ அதே காரணமாக அக்கினியில் தோன்றியவளே திரௌபதி. அவளை முன்னிட்டு போருக்கான சூழல் உண்டாயிருந்தும், தருமர் அதற்குத் தடையாக இருந்தார். மனைவியைக் காக்கும் தர்மத்தைப் பாண்டவர் கைவிட்டு இருந்தனர்.

கஜேந்திர மோட்சம்

சரணாகதி செய்த, பூப்போடும் கைங்கர்யம் செய்யும் கஜேந்திரன் என்ற யானையை முதலை பீடித்தது. யானையோ, "ஆதிமூலமே" என்று அழைத்தது. உடனே கருட வாகனத்தில் விரைந்து வந்த திருமால் சக்ராயுதத்தால் முதலையைக் கொன்று யானையைக் காத்தார்.

அப்படிப்பட்ட பகவான், உயிர்த் தோழனின் மனைவி, உயிர்த் தோழி, சரணாகத பக்தை, திரௌபதி உடுத்தியிருந்த ஒற்றையாடையும் உருவப்படும் நிலையில், சபையிலிருந்த பீஷ்மர் முதலானவரும் பாண்டவரும் கூட எதுவும் செய்ய முடியாமல் பார்த்தபடியிருந்த அவலமான நிலையில் கைகளைத் தூக்கி கிருஷ்ணரை சரணடைந்து அழைத்தாள்!

அப்படியும் அவர் ஏன் வரவில்லை? ஒரு யானைக்காக ஓடி வந்தவன் திரௌபதிக்காக ஏன் உடனே வரவில்லை. எல்லாரும் ஒவ்வொருவர் ஒவ்வொன்றுக்குக் கட்டுப்பட்டு இருந்தபோது யாருக்கும் எதற்கும் கட்டுப்படாத கண்ணபிரான் திரௌபதியின் மானத்தைக் காக்க தன் திருநாமம் கூறியழைத்ததால் புடவையை வெகு நீளமாக அளித்தான்.

ஆனால், ஏன் நேரில் வரவில்லை?

பாண்டவர் சபதம்

நேரில் வந்தால் முதலையைக் கொன்றது போல கௌரவரை மிச்சமின்றிக் கொன்று ஒழித்திருப்பான். ஆனால், பாண்டவர், 'ஒவ்வொருவர் ஒவ்வொருவரைக் கொல்வேன்,' என சபதம் செய்திருந்தனர். அது பலிக்க வேண்டுமே என்று அப்போதைக்குப் புடவையை அளித்ததோடு நின்றான்.

இதைத்தான் காரணமாக எல்லாரும் சொல்லி வருவர்.

'கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம், சரணாகதாம்' என்று பிரபத்தியைச் செய்தாள் திரௌபதி.

ஆனால், இப்படி சரணாகதி செய்தும் கண்ணபிரான் வரவில்லை. சரணாகதிக்கோ, இடம், காலம், நியமம் மூன்றும் தேவையில்லையே. விஷய நியமமும், கண்ணனிடம் செய்ததால் சரியாக இருப்பதால் பிரபத்தியிலும் தவறில்லையே.

ஸ்ரீகிருஷ்ணாபிப்ராயம்

ஸ்ரீகிருஷ்ணனுடைய கோபமே காரணம். அதனாலேயே அவர் அப்போது வரவில்லை.

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் கூறுகிறார்:

'த்ரௌபதி பரிபவம் கண்டிருந்தது க்ருஷ்ணாபிப்ராயத்தாலே ப்ரதாந தோஷம்' (வசன பூஷணம் 20)

'அர்ஜுனா; கேசவஸ்ய ஆத்மா, க்ருஷ்ணச்ச" என்பதாக ஸ்ரீகிருஷ்ணனுடைய உயிர்த்தோழன் அர்ஜுனன். அவனிடம் கண்ணன் தவறுகளைக் கண்டார்.

1)'தகாத கௌரவரிடம் கருணை வைத்தது'

2) 'தன் தர்மமான போரை அதருமம் எனக் கருதியது'

3) 'த்ரௌபதியின் துக்கத்தைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தது.' –இதில் முக்கியம் திரௌபதியின் துக்கம் பார்த்தும் காக்க எதுவும் செய்யாதது.

பெரிய வீரனாக விளங்கியும், இப்படி இருந்தது, கிருஷ்ணருக்குப் பிடிக்கவில்லை, இதைக் கொடிய பாவமாக நினைத்தார். ஆகவே, அப்போது கௌரவ சபைக்கு வந்திருந்தால் கௌரவரோடு பாண்டவரையும் கொன்றிருப்பார்.

கூந்தலைப் பிடித்து இழுத்து வரப்பட்டதையே பொறுக்க முடியாத கிருஷ்ணர், அவள் அமங்கலியாக வெறுங்கழுத்துடன் இருந்தால் (நக்ஷமாமி) 'என்னால் தாங்க முடியாது' என்றே வராமலிருந்து விட்டார்.

ஆனாலும், 'பாண்டவர்க்காக தூது போனதும், அர்ஜுனனுக்குத் தேரோட்டியதும், பல தந்திரங்களைப் பண்ணி பாண்டவரைக் காப்பாற்றி வெற்றி பெறச் செய்ததும் திரௌபதிக்காக கௌரவரைப் பழி வாங்கவே. அர்ஜுனனுக்கு சரமச் செய்யுளை உபதேசித்ததும் அவளுக்காகவே.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

# குரங்கு அணில் காகத்திற்கு
# அருள் தந்த சிவன்

தலங்களின் பெயர்கள், அத்தலத்தில் வழிபட்டவர்களின் பெயரால் வழங்கப் படுவதைக் காண்கிறோம். திருவானைக்கா, திருக்காளத்தி போன்ற தலங்கள் இவற்றிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. அந்த வகையில் குரங்கு, அணில், காகம் மூன்றும் வழிபட்டுப் பேறு பெற்றதால், குரங்கணில் முட்டம் என்று ஒரு திருத்தலம் அழைக்கப்படுகிறது.

வாலி, இந்திரன், யமன் இம்மூவரும் தங்களது முன்வினைப் பயனால் வாலி குரங்காகவும், இந்திரன் அணிலாகவும், யமன் காகமாகவும் உருவம் பெற்று வருந்தி வாழ்ந்து வந்தனர். தங்களுடைய வினைப்பயன் நீங்க, கயிலைநாதனை வேண்டி நின்றனர். சிவபெருமான் அவர்களிடம், காஞ்சிக்குத் தெற்கேயுள்ள சிவாலயம் சென்று வழிபட்டால், உங்களது வினைப்பயன் நீங்க, பழைய நிலையில் வாழ்வீர்கள் என்றார்.

அதன்படியே மூவரும் இங்குவந்து வழிபட்டு தங்கள் தெய்வ நிலையை அடைந்தனர். இப்படி மூவரும் குரங்காகவும், அணிலாகவும், காகமாகவும் வழிபட்டுப் பேறுபெற்ற தலமாக விளங்குவது திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள குரங்கணில் முட்டம் சிவாலயமாகும்.

தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவத் தலங்களுள் குரங்கணில்முட்டம் ஆறாவது திருத்தலமாகத் திகழ்கின்றது.

**வாலி:** முன்வினைப்பயனால் துன்புற்ற வாலி, சிவபெருமானின் ஆணையின்படி, இத்தலம் வந்து இறைவனை வழிபட்டார். அவ்வாறு வழிபடும்போது, இறைவனுக் குச்சூட்ட வேண்டிய பூக்களைக் கைகளால் பறிக்காமல், மரத்தை உலுக்கி இறைவனின் திருமேனியில் பூக்கள் விழுமாறு அர்ச்சனை செய்து வழிபட்டார். அதனால் இறைவன் கொய்யா மலர் நாதன் என்று அழைக்கப் படுகின்றார். தேவாரத்துள் இறைவன் கொய்யாமலர் சூடி என்று குறிக்கப் பட்டுள்ளார். வாலி வழிபட்டதால், சுவாமிக்கு வாலீஸ்வரர் என்ற திருப்பெயரும் வழங்குகிறது.

**இந்திரன்:** கௌதம முனிவரின் மனைவியான அகல்யாதேவியின் அழகில் மயங்கிய இந்திரன் அவள் மீது மோகம் கொண்டான். இதையறிந்த கௌதம முனிவரின் சாபத்தினால் இந்திரன் உடல் முழுக்க யோனிகளாக ஆகிவிட்டன. இதனால் மனம் வருந்தி தன் தவறை உணர்ந்த இந்திரன், தன் துயர் தீர வழி வேண்டி சிவபெருமானை வணங்கினான். அவனது வேண்டுதலுக்குச் செவி சாய்த்த சிவபெருமான், காஞ்சியை அடுத்துள்ள வாலீஸ்வரர் ஆலயத்தில் வணங்கி வழிபடும்படிக் கூறினார். அதன்படியே அணில் வடிவில் இங்கு வந்து இறைவனை வழிபட்டு வந்தான். இதன் பயனாய் தன் பாவம் நீங்கி ஆயிரங்கண்ணான் என்ற பெயரை அடைந்தான்.

**யமன்:** பதினாறு வயது வரை மட்டுமே ஆயுள் பெற்ற மார்க்கண்டேயன், பல்வேறு சிவாலயங்களை வழிபட்டு வந்தான். தனது ஆயுள் முடியும் நாளன்று எமனுக்கு அஞ்சிய மார்க்கண்டேயன், தனக்கு அபயம் வேண்டி சிவபெருமானைக் கட்டித் தழுவினார். அப்போது அவனைப் பிடிக்க எமதருமன் வீசிய பாசக் கயிறு இறைவன் மீதும் விழுந்தது. இதனால் கோபம் கொண்ட சிவபெருமான், எமனை எட்டி உதைத்து அவனது பதவியைப் பறித்தார். தவறாகக் கயிற்றை வீசியதால், சாபம் பெற்ற எமன் பாவ விமோசனம் வேண்டி நின்றான். இறைவன் அருளியபடி, காஞ்சியை அடுத்துள்ள வாலீஸ்வரர் சிவாலயத்திற்குக் காக வடிவில் சென்றான். அங்கு ஒரு தீர்த்தம் ஏற்படுத்தி, இறைவனை வழிபட்டு சாப விமோசனம் பெற்றான்.

இந்த ஐதீகத்தை நினைவுறுத்தும் வகையில், காகம் தனது மூக்கால் கீறிய தீர்த்தம் இன்றும் பிறைச் சந்திரன் வடிவில் ஆலயத்தின் மூன்று புறங்களிலும் நீர் நிறைந்து எழிலுடன் காட்சி

**-பனையபுரம் அதியமான்**

தருகின்றது. இக்குளத்தில் தாமரையும், அல்லியும் பூத்துக் குலுங்குகின்றன. இத்தீர்த்தத்திற்குக் காக்கை மடு எனப் பெயர் வழங்குகிறது.

**தொன்மைச் சிறப்பு:** கி.பி.1912 ஆம் ஆண்டிற்கான தொல்லியல் ஆய்வறிக்கையின் மூலம் இத்தலத்தில் ஐந்து கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இதில் மிகவும் பழமை வாய்ந்தது கி.பி.963ஆம் ஆண்டின் இராஷ்டிரகூட மன்னனான கன்னரதேவன் கல்வெட்டாகும். இக் கல்வெட்டில் காளியூர் கோட்டத்து இருகழிநாட்டு மாமண்டூர் பற்றத்து பல்லவபுரம் என குரங்கணில்முட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீபலி பூஜைக்காக நிலம் அளித்த செய்தி இக்கல்வெட்டின் மூலம் தெரிய வருகின்றது.

மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் (கி.பி.1187) கல்வெட்டு மூலம் பல்லவபுரத்தைச் சேர்ந்த ஒருவர் விளக்கெரிக்க பணம் அளித்த செய்தி தெரிய வருகிறது.

இதே மன்னனின் (கி.பி.1198) கல்வெட்டின் மூலம் இப்பகுதியைச் சார்ந்த சத்திமங்கலம் எனும் அம்மை நல்லூர் என்ற ஊர் இக்கோயிலுக்கு தேவதானமாக வழங்கப்பட்டதை அறிய முடிகிறது. சம்புவராயரின் ஆணை பெற்று நீறணிந்தான் சேதிராயன் இக்கொடையை வழங்கியதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றொரு கல்வெட்டு, கோனேரின்மைகொண்டான் (கி.பி.12ஆம் நூற்றாண்டு) காலத்தைச் சார்ந்தது. இதில், இவ்வாலய சீரமைப்பிற்காக ஐந்து வேலி நிலம் வழங்கப்பட்டு, அதற்கு 25 பொன் செலுத்தி வரிவிலக்கு வழங்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இந்த ஆவணத்தில் துஞ்சலூர் உடையான் என்பவன் கையொப்பம் இட்டுள்ள செய்தியும் தெரிய வருகிறது.

இதே மன்னனின் காலத்தில் மாமண்டூர்பற்று ஊரைச் சார்ந்த நிலம், இவ்வாலயத்திற்காக கொடை அளிக்கப்பட்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டுகளில் இறைவன் பெயர் திருக்குரங்கணி முடையார் என்றும், திருக்குரங்கணிமுட்ட நாயனார் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

**பாடல் பெற்ற தலம்:**

இத்தலம் திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலமாகும்.

விழுநீர் மழுவாள் படை அண்ணல் விளங்கும்
கழுநீர் குவளைம் மலரக் கயல்பாயும்
கொழுநீர் வயல்சூழ்ந்த குரங்கு அணில் முட்டம்
தொழுநீர்மையர் தீதுஉறு துன்பம் இலரே

என இத்தலத்து இறைவனை வணங்கும் அடியார்கள் பாவ கன்மத்தால் துன்பம் படியாதவர் களாக வாழ்வார்கள் என திருஞானசம்பந்தர் அருளிச் செய்கிறார்.

**ஆலய அமைப்பு:** இவ்வாலயம் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இராஜகோபுரம் இல்லை. கோயிலின் பின்புறம் பிறைச் சந்திர வடிவில் ஆலயத்தை அணைத்த நிலையில் மூன்று பக்கமும் நீர் நிறைந்து காணப்படுகிறது. மேற்கு வாயில் வழியே உள்ளே நுழைந்ததும், பலிபீடம், நந்திதேவர் இவற்றைக் கடந்ததும், ஆலய நுழைவாயிலை அடைகிறோம். நுழைவாயிலின் இருபுறமும் குரங்கு, அணில், காகம் வழிபட்ட ஐதீகக் காட்சி புடைப்புச் சிற்பங்களாக அமைந் துள்ளன. இதில் அணில் வழிபடுவதற்குப் பதிலாக இந்திரன் உருவம் மட்டுமே காணப்படுகிறது. இந்திரனே அணில் வடிவில் வழிபட்டதாகத் தலபுராணம் கூறுகிறது. திருஞான சம்பந்தரும் தனது தேவாரத்தில் குரங்கு, அணில், முட்டம் என்ற வரிகளால் இதனை உறுதிப்படுத்துகின்றார்.

**வாலீஸ்வரரும் – இறையார் வளையம்மையும்:** ஆலயத்திற்குள் நுழைந்ததும், மேற்கு நோக்கியவாறு வாலீஸ்வரர் எளிய உருவில் கம்பீரத்துடன் காட்சி தருகின்றார். இறைவனின் கருவறைக்கு வெளியே வலது புறம்









அன்னையின் சந்நிதி அமைந்துள்ளது. அன்னையின் பெயர் இறையார் வளையம்மை என்பதாகும். அன்னை சிறிய வடிவில் எழிலுடன் தெற்கு நோக்கியவாறு காட்சி தருகின்றாள்.

இவ்வாலயத்தில் விநாயகர், வள்ளி தெய்வயானையுடன் முருகப் பெருமான், காசி விஸ்வநாதர், விசாலாட்சி, துர்க்கை, பிரம்மா, நவக்கிரகங்கள், விஷ்ணு, தட்சிணாமூர்த்தி, சப்தமாதர்கள், சைவக் குரவர்கள் நால்வர், சேக்கிழார் ஆகியோர் தனித்தனியாக, எழுந்தருளியிருந்து அருள் வழங்கி வருகின்றனர்.

**ஆலயச் சிறப்பு:** இத்தலம் முற்பிறவி வினைகளை நீக்கி, இகவாழ்வில் நற்பயன் தரும் திருக்கோயிலாக திகழ்வதால், இத்தலத்தை வழிபடுவோர் தங்களது முற்பிறவி வினைகளை அறுத்து நல்வாழ்வு வாழ வழி வகுக்கின்றது.

அதேபோல, திருமணமான பெண்கள் குழந்தைப் பேறு பெறவும், சுகப் பிரவசம் அடையவும், இத்தலத்து இறையார் வளையம்மையை வணங்கிச் சென்றால் அது நிச்சயம் கைகூடும் என்பதற்கு, இங்கு வந்து செல்லும் பக்தர்கள் சாட்சியாக விளங்குகின்றனர்.

இவ்வாலயத்தின் சுற்றுப் பிரகாரத்தில் அமைந்துள்ள விஷ்ணு துர்க்கையின் காலடியில் மகிஷாசுரன் காணப்படவில்லை.

**தலமரம் – தீர்த்தம்:** இவ்வாலயத்தின் ஆதித் தலமரம் பவழமல்லிகை யாகும். இதன் மலர்களையே பெருமான் சூடி மகிழ்ந்தார் என்று கூறுகின்றனர். இலந்தை மரமும், தலமரமாகக் கொள்ளப்படுகிறது. தீர்த்தமாக காக்கை மடுவும் விளங்குகின்றன.

**தரிசன நேரம்:** இவ்வாலயம் காலை 7 மணி முதல் 9 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் திறந்திருக்கும். இவ்வாலய அர்ச்சகர் இவ்வூரிலேயே இருப்பதால், இறைவனை எளிதாக தரிசிக்க முடியும்.

இத்திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகத்தின் கீழ் வருகிறது.

**குடைவரைக் கோயில்:** இக்கோயிலுக்கு வெகு அருகில் பல்லவர் காலத்து குடைவரைக் கோயில் ஒன்று அமைந்துள்து. மிகவும் தொன்மை வாய்ந்த இப்பகுதியை இந்திய தொல்லியல் துறை பராமரித்து வருகின்றது. இவ்வாலயம் செல்பவர்கள் இந்தத் தொன்மை வாய்ந்த இடத்தையும் கண்டு மகிழலாம்.

**அமைவிடம்:** இத்தலம் திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு வட்டத்தில் அமைந்துள் ளது. காஞ்சிபுரம் – செய்யாறு செல்லும் நெடுஞ்சாலையில் காஞ்சிபுரத்திலிருந்து தெற்கே சுமார் 7 கி.மீ., தொலைவில் அமைந்துள்ள தூசி என்ற ஊரிலிருந்து கிழக்கே 2 கி.மீ., தொலைவில் குரங்கணில் முட்டம் அமைந்துள்ளது. தூசியில் இறங்கி நடந்து தான் செல்ல வேண்டும். இவ்வூருக்கு பேருந்து வசதி இருந்தால் அடியார்கள் அதிக அளவில் தரிசிக்க உதவியாக இருக்கும்.

முற்பிறவியில் செய்த வினைகள் நீங்கி, சுக வாழ்வு பெறவும், மகப்பேறு மற்றும் சுகப் பிரசவம் பெறவும் கண் கண்ட தலமாக குரங்கணில்முட்டம் திகழ்கின்றது.

## நீதிக் கதைகள்

# அரசனின் வைரமோதிரம்

ஓர் அரசர் இருந்தார்.

அவருக்கு வயதாகிவிட்டது.

அதனால் அவர் உள்ளத்தில் கவலையும் பயமும் குடிகொண்டன.

மரண பயம் காரணமாக அந்த அரசரால் இரவில் சரியாகத் தூங்க முடியவில்லை.

ஏற்கெனவே போர்க்களங்களில் எத்தனையோ பேரை ஓட ஓட விரட்டியவர் இந்த அரசர்.

ஆனாலும் இப்போது அந்தத் துணிச்ச லெல்லாம் அவரிடமிருந்து எங்கேயோ போய்விட்டது.

'என்ன செய்யலாம்?' என்று அரசர் யோசித்தார்.

பிறகு அவர் எல்லா அமைச்சர்களையும் அழைத்து, "எனக்கு ஓர் ஆலோசனை சொல்லுங்கள்!'' என்று கேட்டுக் கொண்டார்.

அமைச்சர்கள், "என்ன ஆலோசனை?" என்று வினவினார்கள்.

"எனக்கு ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டுவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த நேரத்தில் நீங்கள் யாருமே ஆலோசனை சொல்வதற்கு என் பக்கத்தில் இல்லை என்றும் வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சமயத்தில் எனக்கு உபயோகப்படும் வகையில் ஒரு வாசகம் – பொன்மொழி சொல்லுங்கள். அதை நான் என்னுடைய வைர மோதிரத்தின் அடியில் பதித்து வைத்துக் கொள்வேன்!" என்றார் அரசர்.

அவர் போட்டிருந்த வைர மோதிரமும் அதற்குத் தகுந்த மாதிரி திறந்து மூடுவதுபோல் அமைந்திருந்தது.

அமைச்சர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, 'அரசருக்கு என்ன வாசகம் சொல்லலாம்?' என்று யோசனை செய்தார்கள்.

ஒருவருக்கும் ஒன்றும் சரியாகத் தோன்றவில்லை... குழப்பமாக இருந்தது.

அந்த நேரத்தில் பெரியவர் ஒருவர் அங்கே வந்தார்.

அவர், "நான் அரசர் கேட்டதற்குப் பொருத்தமாக ஒரு வாக்கியம் சொல்வேன். ஆனால் ஒரு நிபந்தனை: அதை யாரும் ஆர்வம் காரணமாக அவசரப்பட்டு படிக்கக் கூடாது. அதை ரகசியமாக அந்த மோதிரத்திற்குள் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். அரசர் எப்போதாவது இக்கட்டில் மாட்டிக் கொள்ளும்போது – வேறு வழியே இல்லை – என்ற நிலைமை ஏற்படும்போது மட்டும்தான் மோதிரத்தைத் திறந்து பார்க்க வேண்டும்'' என்று தெரிவித்தார்.

பெரியவரின் நிபந்தனையை அரசர் உட்பட அமைச்சர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள்.

பெரியவர் கூறிய வாக்கியத்தை ரகசியமாக மோதிரத்திற்குள் பதித்து மூடினார்கள். அரசர் அதைத் தன் விரலில் மாட்டிக்கொண்டார்.

சிறிது காலமாயிற்று.

அந்த அரசருக்கு ஒரு சோதனை வந்தது.

இவர் மீது அடுத்த நாட்டு மன்னன் படையெடுத்து வந்தான். அவன் இவரிடம் ஏற்கெனவே தோற்றுப் போனவன். இப்போது ஒரு வெறியில் வந்தான். வெற்றி பெற்றுவிட்டான்.

இவர் தன் நாட்டை இழந்தார்.. எல்லாவற்றையும் இழந்தார். அடிபட்ட ஒரு குதிரையில் ஏறித் தப்பிச் சென்றார். இவரைப் பகைவர்கள் பின்னால் துரத்தினார்கள்...

–தென்கச்சி கோ.சுவாமிநாதன்

இவர் ஒரு மலையுச்சிக்குச் சென்றுவிட்டார். அதற்கும் அப்பால் போகமுடியாது... பயங்கரமான பள்ளம். அது உல்லாசப் பயணிகள் வந்து கண்டுகளிக்கும் இடம். ஆனால் இவருக்கு அந்த இடம் மரணப் பயணத்தின் வாசல்!

அவர் இங்கிருந்து திரும்பவும் முடியாது... அவ்வளவு குறுகிய பாதை அது. வேறுவழியே இல்லை. அந்தச் சமயத்தில் சூரிய ஒளி மோதிரத்தில் பட்டு மின்னியது.

உடனே இவருக்கு மோதிரத்தின் அடியில் வைத்த வாசகம் நினைவுக்கு வந்தது.

இவர் மோதிரத்தைத் திறந்து படித்தார். அதில், "இந்த நிலையும் மாறிவிடும்! (This too will pass away!)" என்ற வாசகம் இருந்தது.

அதைப் படித்ததும் மன்னருக்கு ஒரு தைரியம் வந்துவிட்டது.

இவரைத் துரத்திக்கொண்டு பின்னால் வந்த பகைவர்களும் திசை மாறி வேறு எங்கேயோ தேடிப் போய்விட்டார்கள்!

'அவர்கள் என்னைத் துரத்திவராவிட்டால் இவ்வளவு அழகான ஓர் இடம் இருப்பதே எனக்குத் தெரியாமல் போயிருக்குமே!' என்று அரசர் நினைத்தார்.

'இவ்வளவு அழகை ரசிப்பதற்காக ஒரு நாட்டையே கூட இழக்கலாம்" என்று அவருக்குத் தோன்றியது!

அமைதியாக இருந்து அரசர் அந்த அழகான இடத்தை ரசித்தார்.

எதிரிகள் அனைவரும் எங்கேயோ போய் விட்டார்கள்.

மன்னர் நாடு திரும்பினார். மீண்டும் படைகளைத் திரட்டினார். சிறிது காலத்திற்குள் படையெடுத்துச் சென்றார். யாரிடம் தோற்றாரோ அவரையே வெற்றி கண்டு மன்னர் தலைநகருக்குத் திரும்பி வருகிறார்.

வரவேற்பு விழா பிரமாதமாக இருந்தது... ஆடல், பாடல், கோலாகலம்!

அவற்றைப் பார்த்தும் அந்த அரசருக்குத் தலைகால் புரியவில்லை.. 'நம்மை இனிமேல் யாராலும் ஜெயிக்கமுடியாது!" என்று அவர் நினைத்தார். அகம்பாவம் அவரிடம் லேசாக எட்டிப் பார்த்தது.

இப்போது மறுபடியும் சூரிய ஒளிபட்டு மோதிரம் மின்னியது. அதைத் திறந்து அரசர் மறுபடியும் படித்தார்.

"இந்த நிலையும் மாறிவிடும்!" என்று அதில் இருந்தது.

அவ்வளவுதான். அவர் மனம் அடங்க ஆரம்பித்தது. ஆணவம் நீங்கியது.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன தெரியுமா?

எந்தச் சூழ்நிலையிலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் இங்கே எதுவுமே நிரந்தமில்லை.



திருக்கோயில் பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், ஊதிய உயர்வு முதலான அறிவிப்புகளை சட்ட மன்றத்தில் அறிவித்ததைத் தொடர்ந்து. மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களைத் தமிழ்நாடு திருக்கோயில் தொழிலாளர் சங்கத்தினர் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

சங்க நிர்வாகிகள் தேவராசன், ராமகிருஷ்ணன், சுரேஷ் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

## இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை எண்.47
## 2010-2011 அறிவிப்புகள்.

# திரு. கேஆர்.பெரிய கருப்பன்

### மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்



சட்டப் பேரவையில் கடந்த 13.05.2010 அன்று நடைபெற்ற இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.கேஆர். பெரிய கருப்பன் அவர்கள் 2010-2011 ஆம் ஆண்டிற்கான 154 புதிய அறிவிப்புகளை அறிவித்தார்கள். அவற்றின் விவரம் வருமாறு:

**பொது அறிவிப்புகள்**

1. "உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்," திருக்கோயில்களில் ரூ.72,000/- மற்றும் அதற்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கும் இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும். காப்பீட்டிற்கான சந்தா தொகையினை அறநிலையத் துறை ஏற்கும். இத்திட்டத்தில், வருமான அடிப்படையில் பயனடைய இயலாத திருக்கோயில் பணியாளர்களுக்கு இதர காப்பீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம் ஒரு இலட்சம் பணியாளர்கள் பயனடைவார்கள்.

2. திருக்கோயில் பணியாளர்களுக்கு திருத்திய ஊதியம் நிர்ணயம் செய்ய அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் திருக்கோயில்களில் பணிபுரியும் ஒரு இலட்சம் பணியாளர்கள் பயனடையும் வகையில் திருத்திய ஊதிய உயர்வு வழங்கப்படும்.

3. பக்தர்கள் பயனடையும் வகையில்,

திருக்கோயில்களில் எதிர்கால வளர்ச்சியைக் கருத்தில் கொணடு மேம்பாட்டு பணிகளை நிறைவேற்றிட முதற்கட்டமாக 181 திருக்கோயில்களில் பெருந்திட்ட வரைவுகள் (Master plan) தயாரிக்கப்படும்.

4. திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு உதவி ஆணையர் அலுவலகம் புதியதாக தோற்றுவிக்கப் படும்.

5. முக்கிய திருக்கோயில்களில் உள்ள மூலிகை ஓவியங்களை பாதுகாக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதனடிப்படையில் திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் அமைந்துள்ள தேவாசிரிய மண்டபத்தில் உள்ள மூலிகை ஓவியங்கள் உட்பட 50 முக்கிய திருக்கோயில்களிலுள்ள மூலிகை ஓவியங்கள் முழுமையாக பாதுகாக்கப்படும்.

6. புதுக்கோட்டை திருக்கோயில்களின் பராமரிப்பிற்காக ஆண்டுதோறும் அரசு வழங்கி வரும் நிதியுதவி ரூ.15 இலட்சத்தினை ரூ.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

7. ஆழ்வார்கள் பன்னிருவருக்கும் திருச்சி, திருவரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் ஆண்டுக்கு ஒருமுறை ஒரு நாளில் அரசு விழா மிகச் சிறப்பாக நடத்தப்படும்.

**திருப்பணிகள்** 8. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் கண் காணிப்பு கேமரா (IP Camera) பொருத்தும் பணி ரூ.66.50 இலட்சம் மதிப்பீட்டிலும், வீரவசந்த ராயர் மண்டபம் சீரமைத்தல் பணி ரூ.22 இலட்சம் மதிப்பீட்டிலும், எல்லீஸ் நகரிலுள்ள திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் நவீன திருமண மண்டபம் கட்டும் பணி ரூ.10 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

9. திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நாழிக்கிணறு தென்பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய பக்தர்கள் தங்கும் மண்டபம் கட்டும் பணி ரூ.7 கோடி மதிப்பீட்டிலும், நவீன சஷ்டி விரத மண்டபம் மற்றும் பாதுகாப்பு வசதியுடன் பொருட்கள் வைப்பறை கட்டும் பணி ரூ.2 கோடி மதிப்பீட்டிலும், தேவர் குடிலின் மேல் தளத்தில் நான்கு ஓய்வு அறைகள் கட்டும் பணி ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆறுமுக விலாஸ் எதிரே இரண்டு ஓய்வறைகள் கட்டும் பணி ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப் படும்.

10. பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் கீழ்க்காணும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

பணியாளர்களுக்கு 50 குடியிருப்புகள் கட்டுதல் – மதிப்பீடு ரூ.3.கோடி.

திருக்கோயில் பேருந்து நிலையத்தில் பக்தர்களுக்கு ஓய்வு மண்டபம் கட்டுதல் – மதிப்பீடு ரூ.2 கோடி.

கருணை இல்ல வளாகத்தில் ஒருங்கிணைந்த அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி மற்றும் ஓதுவார் பயிற்சிப் பள்ளி கட்டுதல் – மதிப்பீடு ரூ. 1 கோடி.

மலைக்கோயில் விருந்தினர் அறை மற்றும் உணவகம் கட்டுதல் – மதிப்பீடு ரூ.75 இலட்சம்.

மலைக்கோயிலில் விரிவுபடுத்தப்படும் அன்னதான மண்டபத்தின் மேல் பகுதியில் வெளிப்பிரகார மண்டபம் கட்டுதல் – மதிப்பீடு ரூ.63 இலட்சம்.

குடமுழுக்கு நினைவரங்கம் வழியே, யானைப்பாதையை இணைக்கும் புதிய பாதையில் நவீன மேற்கூரை அமைக்கும் பணி – மதிப்பீடு ரூ.50 இலட்சம்.

பழனி, கள்ளிமந்தயம் கோசாலை வளாகத்தில் கால்நடைகளுக்கு தண்ணீர் வசதிக்காக கசிவு நீர் குட்டைகள் மூன்று அமைத்தல் – மதிப்பீடு ரூ.40 இலட்சம்.

வடக்கு கிரிவீதி அழகுநாச்சியம்மன் கோயிலருகில் பக்தர்களின் வசதிக்காக கழிப்பறை மற்றும் குளியலறை கட்டுதல் – மதிப்பீடு ரூ.30 இலட்சம்.

அருள்மிகு பெரியாவுடையார் கோயிலுக்கு செல்வதற்கு தார்சாலை அமைத்தல் – மதிப்பீடு ரூ.25 இலட்சம்.

பாதயாத்திரை பக்தர்கள் தங்குவதற்கு ஸ்ரீராமபுரத்தில் பக்தர்கள் தங்கும் மண்டபம் கட்டுதல் – மதிப்பீடு ரூ.20 இலட்சம்.

11. கரூர் மாவட்டம், குளித்தலை, சிவாயம் அய்யர்மலை, அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு மலை மீது பக்தர்கள் சிரமமின்றி சென்று சுவாமி தரிசனம் செய்வதற்காக ரூ.4 கோடி மதிப்பீட்டில் கம்பி வட ஊர்தி அமைக்கப்படும்.

12. தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, அருள்மிகு பூவனநாதசுவாமி திருக்கோயில் திருப்பணிகள் ரூ.3.74 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

13. மதுரை, அருள்மிகு மதனகோபாலசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்படும்.

14. திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணிய

சுவாமி திருக்கோயிலில் புதிய வணிக வளாகம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

*15.* திருப்பூர் மாவட்டம், காங்கயம், அருள்மிகு பிரசன்ன வெங்கட் ரமணசுவாமி திருக்கோயிலில் ஐந்து நிலை இராஜகோபுரம், அர்த்த மண்டபம், கருவறை, மகா மண்டபம் மற்றும் ஏழு உபசன்னதிகள் கட்டும் பணிகள் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*16.* திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம், அருள்மிகு சோளீஸ்வரர் திருக்கோயிலில் இராஜகோபுரம் உள்ளிட்ட திருக்கோயில் திருப்பணிகள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*17.* பண்ணாரி, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலின் முன்புறம் புதிதாக ஒன்பது நிலை இராஜகோபுரம் கட்டும் பணி ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலும், ஓய்வு மண்டபம் கட்டும் பணி ரூ.45 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

*18.* திருச்சி, சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்காக ரூ.1 கோடி மதிப்பீட்டில் நூறு கழிப்பறைகளும், திருக்கோயிலின் புதிய அலுவலகம் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

*19.* விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலில் (ஆண்டாள்) இராஜகோபுரத் திருப்பணி ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலும், அன்னதான மண்டபம் ரூ.7.40 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆடிப்பூர கொட்டகை ரூ.15 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

*20.* சென்னை, திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலின் மேற்கு பிரகாரத்தில் புதிய மண்டபம் ரூ.85 லட்சம் மதிப்பீட்டிலும், ஐந்து நிலைகள் கொண்ட மேற்கு இராஜகோபுரம் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

*21.* காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் திருப் பணிகள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படும்.

*22.* கோவை மாவட்டம், பேரூர், அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயில் திருப்பணிகள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*23.* சங்கரன்கோயில், அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயிலில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய திருமண மண்டபம் கட்டும் பணி ரூ.99 இலட்சம் மதிப்பீட்டிலும், மேற்குப் பிரகாரத்தில் யாகசாலை கலையரங்க மண்டபம் கட்டும் பணி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும், நடராஜர் சன்னதிக்கு மேற்குப் பகுதியில் பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம் கட்டும்பணி ரூ.15 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

*24.* திருப்பூர் மாவட்டம், சிவன்மலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் கருணை இல்லம், திருமண மண்டபம் விரிவாக்கம், திருக்கோயிலின் அடிவாரத்தில் கொட்டகை மற்றும் தரிசன வரிசை அமைக்கும் பணிகள் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*25.* திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் பக்தர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும், கிரிவலப் பாதையில் குபேரலிங்கம் அருகில் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதியும், ஆறாம் பிரகாரத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பூங்காவும், கிரிவலப் பாதை காஞ்சி சாலையில் உள்ள அபய மண்டபம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பித்தலும் மேற்கொள்ளப்படும்.

*26.* சிவகங்கை மாவட்டம், கொல்லங் குடி, அரியாக்குறிச்சி, அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயிலில் பணியாளர் குடியிருப்பு மற்றும் பாதுகாப்பு சுவர் கட்டும் பணிகள் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள் ளப்படும்.

*27.* கோவை அருள்மிகு கோணியம்மன் திருக்கோயிலில் அன்னதான மண்டபம், சமையல் கூடம் மற்றும் பொருட்கள் பாது காப்பு அறை உள்ளிட்ட பணிகள் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*28.* திருச்சி, சமயபுரம் அருள்மிகு ஆதிமாரியம்மன் திருக்கோயிலில் ஓய்வுக் கூடம் மற்றும் முடிகாணிக்கை மண்டபம் உள்ளிட்ட மேம்பாட்டு வசதிகள் ரூ.1.14 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*29.*விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலின் உபகோயிலான திருவண்ணாமலை, அருள்மிகு ஸ்ரீனிவாச பெருமாள் திருக்கோயில் திருப்பணி வேலைகள் ரூ.1.12 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*30.* திண்டுக்கல், அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயிலில் ஏழு நிலை இராஜகோபுரம் கட்டுதல் மற்றும் சேவார்த்திகள் தங்கும் மண்டபம்

கட்டும் பணிகள் ரூ.1.07 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

31. கடலூர் மாவட்டம், வடலூர், அருள்மிகு வள்ளலார் தெய்வ நிலையத்தில் ஞானசபை புதுப்பித்தல், சித்திவளாக திருமாளிகை புதுப்பித்தல், முன்மண்டபம் கட்டுதல், கருங்குழி சன்னதி புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

32. திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டம், குற்றாலம், அருள்மிகு திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோயிலில் புனரமைப்பு பணிகள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மேற்கொள் ளப்படும்.

33. சென்னை, மாங்காடு, அருள் மிகு காமாட்சியம்மன் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு வைகுண்டப் பெருமாள் திருக்கோயிலின் கிழக்கு வாயிலில் ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டும் பணி ரூ.70 இலட்சம் மதிப்பீட்டிலும், புதிய அலுவலக கட்டடம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

34. ஈரோடு மாவட்டம், தாராபுரம், எரங்கம்பாடி, அருள்மிகு நாகேஸ்வரர் திருக்கோயிலில் சன்னதிகள் புதுப்பித்தல் மற்றும் கல்தளம் அமைக்கும் பணிகள் ரூ.91 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

35. மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், உறங்கான்பட்டி, அருள்மிகு மந்தை கருப்பண்ணசாமி திருக்கோயி லின் திருப்பணிகள் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

36. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக் கோயிலில் தங்க ரதம் நிறுத்துமிடம் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடங் களை புனரமைத்தல் பணிகள் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

37.கோவை மாவட்டம், தேக்கம் பட்டி, அருள்மிகு வனபத்ர காளியம்மன் திருக்கோயிலில் பவானி ஆற்றங்கரை படிக்கட்டு பலப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு சுவர் கட்டும் பணிகள் ரூ.68 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

38.கும்பகோணம், திருநாகேஸ்வரம், அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலில் அன்னதான கூடம், இசைப் பயிற்சி பள்ளி மற்றும் அலுவலக கட்டட கட்டுமானப் பணிகள் ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

39. கடலூர் மாவட்டம், திட்டக்குடி, அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில் திருப்பணிகள் ரூ.64 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

40. திருவாரூர், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலில் நடைபாதை மண்டபம் மற்றும் முதல் பிரகாரத்தின் மேற்கு பகுதியில் மேற்கூரை அமைக்கும் பணிகள் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள் ளப்படும்.

41. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், நயினார் கோயில், அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயிலில் ஏழு நிலை இராஜகோபுரம் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

42. திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், முனுகப்பட்டு, அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் மற்றும் முகமண்டபம் கட்டும் பணிகள் ரூ.56 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படும்.

43. சென்னை, திருவொற்றியூர், பட்டினத்தார் திருக்கோயிலை சீரமைக்கும் பணி ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

44. திருப்பூர் மாவட்டம், கொங்கணகிரி, அருள்மிகு கந்தப் பெருமாள் திருக்கோயிலில் சன்னதிகள் மற்றும் பிரகார மண்டபம் அமைக்கும் பணிகள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

45. திருச்சி மாவட்டம், மணச்சநல்லூர் வட்டம், திருப்பட்டூர், அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயிலில் பக்தர்கள் தங்கும் மண்டபம் கட்டுதல், கழிப்பறை கட்டுதல் மற்றும் நந்தவன மேம்பாட்டு உள்ளிட்ட பணிகள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

46. புதுக்கோட்டை மாவட்டம், நார்த்தமலை, அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் தங்கும் மண்டபம் மற்றும் நவீன கழிப்பறைகள் கட்டும் பணிகள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள் ளப்படும்.

47. சிவகங்கை மாவட்டம், குன்றக்குடி, அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள் ளப்படும்.

48. கன்னியாகுமாரி மாவட்டம், மண்டைக்காடு, அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயிலில் திருப்பணி

வேலைகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும்பணிகள் ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

49.சேலம் மாவட்டம், உத்தமசோழபுரம், அருள்மிகு கரபுரநாதசுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் தங்கும் மண்டபம் மற்றும் சுற்றுப்பிரகார தளம் அமைக்கும் பணிகள் ரூ.49.45 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

50. வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், செங்காடு, அருள்மிகு வைகுண்டப் பெருமாள் திருக்கோயிலில் திருப்பணிகள் ரூ.47.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

51. சேலம் மாவட்டம், ஜாகீர்அம்மா பாளையம், அருள்மிகு வெண்ணங்கொடி முனியப்ப சுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் தங்கும் மண்டபம் மற்றும் அன்னதானக் கூடம் உள்ளிட்ட மேம்பாட்டு வசதிகள் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

52. சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், அல்லிநகரம், அருள்மிகு தண்டீஸ்வர அய்யனார் திருக்கோயிலில் ஐந்து நிலை இராஜகோபுரம் ரூ.33.65 இலட்சம் மதிப்பீட்டிலும், விருந்தினர் விடுதி ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

53. கன்னியாகுமரி மாவட்டம், திற்பரப்பு, அருள்மிகு மகாதேவர் திருக்கோயிலில் திருப்பணிகள் மற்றும் வணிக வளாகம் கட்டும் பணிகள் ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டும்.

54. சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கூடலூர், அருள்மிகு ஆனூரம்மன் என்ற செல்லாண்டி அம்மன் திருக்கோயிலில் ஐந்து நிலை இராஜகோபுரம் ரூ.41.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

55. கும்பகோணம், அருள்மிகு கரும்பாயிரம் கொண்ட விநாயகர் திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.41.43 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

56. கோவை மாவட்டம், ஆனைமலை, அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயிலில் முடிகாணிக்கை மண்டபம் மற்றும் பொங்கல் மண்டபம் கட்டும் பணிகள் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

57. கோவை மாவட்டம், உக்கடம், அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலில் ஐந்து நிலை இராஜகோபுரம் ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

58. ஈரோடு மாவட்டம், கொடுமுடி அருள்மிகு வீரநாராயண மருந்தீஸ்வரர் திருக்கோயிலின் திருமண மண்டபத்தில் உணவுக் கூடம் கட்டும் பணி ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள் ளப்படும்.

59. திருச்சி மாவட்டம், திருவானைக்கா, அருள்மிகு ஜெம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி அம்மன் திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

60. சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், தாயமங்கலம், அருள்மிகு முத்துமாரியம் மன் திருக்கோயிலுக்கு ஐந்து நிலை இராஜகோபுரம் (கல்காரத்திற்கு மேல்) ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

61. சிவகங்கை மாவட்டம், திருமலை அருள்மிகு மலைக்கொழுந்தீஸ்வரர் திருக்கோயிலில் பக்தர்கள் தங்கும் மண்டபம் கட்டும் பணி ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

62. சென்னை, போரூர், அருள்மிகு இராமநாதீஸ்வரர் திருக்கோயிலில் ஐந்து நிலை இராஜகோபுரம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

63. சென்னை, காலடிப்பேட்டை, அருள்மிகு கல்யாண வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலில் ஐந்து நிலை இராஜகோபுரம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

64. நாமக்கல், அருள்மிகு நரசிம்ம சுவாமி திருக்கோயிலின் பணியாளர்கள் குடியிப்பு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

65. கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி, அருள்மிகு புத்துமாரியம்மன் திருக்கோயிலில் புதிய மண்டபம் கட்டும் பணி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

66. தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தேவதானம்பட்டி, அருள்மிகு மூங்கிலணை காமாட்சியம்மன் திருக்கோயில் வளாகத்தில் கான்கிரீட் பேவர் பிளாக் தரைத் தளம் அமைக்கும் பணி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

67. சிவகங்கை மாவட்டம், ஆனந்தூர், அருள்மிகு திருமேனிநாதசுவாமி திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

68. திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், அகரத் திருநல்லூர், அருள்மிகு காமாட்சி மாரியம்மன் திருக்கோயிலில் திருப்பணிகள் ரூ.26.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படும்.

69. தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி

வட்டம், ஆத்தாளூர், அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.26.05 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

70. சிவகங்கை மாவட்டம், இராதானூர், அருள்மிகு தில்லைநாயக சுவாமி திருக்கோயில் திருப்பணிகள் ரூ.25.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

71.இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு நம்புநாயகியம்மன் திருக்கோயிலில் வளாகத்திற்கு அருகில் தங்கும் விடுதி கட்டும் பணி ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

72. கிருஷ்ணகிரி மாவட்டம், தீர்த்தமலை, அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

73. திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், கீரனூர், அருள்மிகு சிவலோகநாத சுவாமி திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

74. நாகை மாவட்டம் மற்றும் வட்டம், அந்தணப்பேட்டை, அருள்மிகு அண்ணாமலைநாத சுவாமி திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

75. தேனி மாவட்டம் மற்றும் வட்டம், வீரபாண்டி, அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலில் முடிகாணிக்கை மண்டபம் கட்டும் பணி ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

76. விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை அருள்மிகு சொக்கநாத சுவாமி திருக்கோயிலில் சுவாமி வாகனங்கள் பாதுகாப்பு மண்டபம் மற்றும் அலுவலகம் கட்டும் பணி ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

77. தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் திருப்பணிகள் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொளளப்படும்.

78. விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் தென் பகுதியில் குளியலறை மற்றும் கழிப்பறை (மூன்று தொகுப்புகள்) கட்டும் பணிகள் ரூ.24.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

79. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு விருப்பாட்சீஸ்வரர் திருக்கோயிலில் ஐந்து நிலை இராஜகோபுரம் ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

80.திருவண்ணாமலை நகர், டி.பி.சூரிய நாராயண செட்டியார் அறக் கட்டளைக்கு சொந்தமான இடத்தில் ரூ.22.80 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்படும்.

81.தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ராஜாமடம், கொள்ளிக்காடு, அருள்மிகு சின்ன ஆவுடையார் திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.22.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

82. ஈரோடு மாவட்டம், அந்தியூர், அருள்மிகு குருநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் பிரகார மண்டபம் கட்டும் பணி ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

83. திருப்பூர் மாவட்டம், சிவன்மலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.21.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

84. திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், ராமகிரி, அருள்மிகு கல்யாண நரசிங்கப் பெருமாள் திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

85. திருவண்ணாமலை மாவட்டம், கொளக்குடி, அருள்மிகு அம்மச்சாரம்மன் திருக்கோயில் திருப்பணிகள் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

86. திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், எலத்தூர் மோட்டூர், அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

87. திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், செ.கூடலூர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் அம்பாள் சன்னதி கட்டும் புனரமைக்கும் பணி ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

88. திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், மேல்நகர், அருள்மிகு திருக்காமேஸ்வரர் திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

89. விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

90. மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், குருவித்துறை, அருள்மிகு சித்திரரதவல்லப பெருமாள் திருக்கோயிலில்

ஐந்து நிலை இராஜகோபுரம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

91. திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு வட்டம், கன்னிவாடி கிராமம், அருள்மிகு கோட்டை கருப்பண்ண சுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் தங்கும் மண்டபம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

92. விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், வி.புத்தூர், அருள்மிகு பாலகோபால சுவாமி திருக்கோயில் புதுப்பிக்கும் பணி ரூ.19.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

93. விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருமுண்டீச்சரம் அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலில் திருப்பணிகள் ரூ.19.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

94. வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், திமிரி, குமரகிரி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் திருப்பணிகள் ரூ.19.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

95. திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், பார்வதியகரம், அருள்மிகு காமாட்சியம்மன் உடனுறை ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.19.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

96. திருச்சி, திருவரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் உள்ள பிள்ளை லோகாச்சாரியார் சன்னதி தோப்பில் அன்னதான கூடம் ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

97. மதுரை, அருள்மிகு கூடலழகர் திருக்கோயிலில் கருவறை, அர்த்த மற்றும் மகா மண்டபத்தில் குளிர்சாதன வசதி ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

98. விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், புளியம்பட்டி, அருள்மிகு மாகாளியம்மன் திருக்கோயிலில் வணிக வளாகம் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

99. சென்னை, கொரட்டூர், அருள்மிகு பாடாலாத்திரி சீயாத்தம்மன் திருக்கோயிலில் தெற்கு பிரகார மண்டபம் ரூ.15.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

100. விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், திருவக்கரை, அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயிலில் உணவருந்தும் கூடம் மற்றும் சமையலறை கட்டும் பணிகள் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

101. விழுப்புரம் மாவட்டம், பீமநாயக்கன் தோப்பு, அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் புதுப்பிக்கும் பணி ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

102. தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், கடுவெளி கிராமம், அருள்மிகு ஆகாயபுரீஸ்வரர் திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

103. தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், தோகூர் கிராமம், அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

104. நாகை மாவட்டம் மற்றும் வட்டம், சீயாத்தமங்கை, அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

105. நாகை மாவட்டம் மற்றும் வட்டம், விற்குடி, அருள்மிகு வீரட்டேஸ்வரர் சுவாமி திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

106. பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வரகூர், அருள்மிகு சிவலோகநாத சுவாமி திருக்கோயிலில் சுவாமி மண்டபம், அர்த்த மண்டபம் மற்றும் மகா மண்டபம் கட்டும் பணிகள் ரூ.14.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

107. சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காளாப்பூர், அருள்மிகு வடக்கு வாசல் செல்லியம்மன் திருக்கோயில் திருப்பணிகள் ரூ.14.35 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

108. சேலம், அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலில் புதிதாக கருணை இல்லம் கட்டும் பணி ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

109. சிவகங்கை மாவட்டம், கமுதக்குடி, அருள்மிகு ஆகமமுடைய அய்யனார் திருக்கோயிலில் மதில் சுவர் கட்டும் பணி ரூ.13.60 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

110. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், குலசேகரப்பட்டினம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் திருப்பணிகள் ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

111. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், குலசேகரப் பட்டினம், அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோயிலில் முன் மண்டபம் கட்டும் பணி ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

112. மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பாண்டாங்குடி, அருள்மிகு கூத்தினிகாட்டு அய்யனார் திருக்கோயிலில் திருமதில் சுவர், தரைத் தளம் சீரமைத்தல், மடப்பள்ளி மற்றும் நுழைவு வாயில் கட்டும் பணிகள் ரூ.11.45 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

113. திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டம், இராமநாதபுரம், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி மற்றும் மாரியம்மன் திருக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம் உள்ளிட்ட திருப்பணிகள் ரூ.11.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

114. திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், காட்டுப்புத்தூர், அருள்மிகு பிடாரி மதுர காளியம்மன் திருக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம் உள்ளிட்ட திருப்பணிகள் ரூ.10.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

115. கோவை, மருதமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் மதிற்சுவர் கட்டும் பணி ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

116. சிவகங்கை மாவட்டம், வடவன்பட்டி, அருள்மிகு கொப்புடாரியம்மன் திருக்கோயிலில் சுற்றுச்சுவர் மற்றும் சுற்றுக் கோயில் கட்டும் பணிகள் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

117. திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலுக்குகு சொந்தமான கமலாலயம் திருக்குளத்தில் ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் படகு நிலையம் அமைக்கப்படும்.

118. ஈரோடு மாவட்டம், அந்தியூர், அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில் வளாகத்தில் வாகன மண்டபம் கட்டும் பணி ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

### திருக்கோயில்களில் ஒலி, ஒளி காட்சி

119. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் ஒலி, ஒளி காட்சி அமைக்கப்படும்.

120. இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் ஒளி, ஒளி காட்சி அமைக்கப்படும்.

121. திருச்சி, திருவரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் ஒலி, ஒளி காட்சி அமைக்கப்படும்.

### மரத் தேர் புதுப்பித்தல் பணி

122. திருவாரூர், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலின் ஆழித்தேர் திருப்பணி ரூ.2 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

123. சிவகங்கை மாவட்டம், கொல்லங்குடி, அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயிலின் திருத்தேர் திருப்பணி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

124. சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி, அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயிலின் திருத்தேர் திருப்பணி ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

125. கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருள்மிகு படவேட்டம்மன் திருக்கோயிலின் திருத்தேர் திருப்பணி ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

126. கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், பொணல்வாடி, அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோயிலின் திருத்தேர் திருப்பணி ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

127. விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், சித்தேரிப்பட்டு, அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயிலின் திருத்தேர் திருப்பணி ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

### தங்க ரதம் புதுப்பித்தல் பணி

128. திருச்சி, சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் தங்க ரதம் புதுப்பித்தல் பணி ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

129. திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் தங்க ரதம் புதுப்பித்தல் பணி ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

### புதிய தங்க ரதம் அமைக்கும் பணி

130. திருவண்ணாமலை மாவட்டம், அ.கோ.படவேடு, அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயிலில் புதிய தங்க ரதம் செய்யும் பணி ரூ.2.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

131. கும்பகோணம், பட்டீஸ்வரம், அருள்மிகு தேனுபுரீஸ்வர சுவாமி திருக்கோயிலில் புதிய தங்க ரதம் ரூ. 2 கோடி மதிப்பீட்டில் செய்யப்படும்.

132. மடப்புரம், அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயிலில் புதிய தங்க ரதம் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் செய்யப்படும்.

133. சேலம் நகர், அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் புதிய தங்க ரதம் ரூ.1.89 கோடி மதிப்பீட்டில் செய்யப்படும்.

**விமானத்திற்கு தங்கத் தகடு பதிக்கும் பணி:** 134. திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் மூலவர் விமானத்திற்கு தங்கத் தகடு பதிக்கும் பணி ரூ.20 கோடி மதிப்பீட்டில்

மேற்கொள்ளப்படும்.

*135*. கோவை மாவட்டம், புதுசித்தாபுதூர், அருள்மிகு ஐயப்ப சுவாமி திருக்கோயிலின் மேற்கூரைக்கு தங்கத் தகடு பதிக்கும் பணி ரூ.4.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*136*. மாங்காடு, அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயிலில் அம்மன் சன்னதி விமானத்திற்கு முதல் நிலை வரை தங்கத் தகடு பதிக்கும் பணி ரூ.3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**தங்கக் கவச பணி:** *137*. சிவகங்கை மாவட்டம், கொல்லங்குடி, அரியாக்குறிச்சி, அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில் அம்மன் தங்கக் கவசம் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

*138*. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் மற்றும் நகர், அருள்மிகு அர்த்த நாரீஸ்வரர் திருக்கோயில் கொடி மரங்களுக்கு தங்க கவசம் அமைக்கும் பணி ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*139*. கும்பகோணம், ஒப்பிலியப்பன் கோயில், அருள்மிகு வெங்கடாசலபதி சுவாமி திருக்கோயிலில் ஆஞ்சநேயருக்கு தங்க கவசம் பொருத்தும் பணி ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*140*. சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி, அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயிலின் மூலவருக்கு தங்க கவசம் அமைக்கும் பணி ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**வெள்ளித் தேர் திருப்பணி:** *141*. சென்னை, தங்கசாலை, அருள்மிகு ஏகாம்ப ரேசுவரர் திருக்கோயிலில் புதிய வெள்ளித் தேர் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்படும்.

*142*. காஞ்சிபுரம், அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயிலில் புதிய வெள்ளித் தேர் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்படும்.

*143*. கும்பகோணம், ஒப்பிலியப்பன் கோயில், அருள்மிகு வெங்கடாசலபதி சுவாமி திருக்கோயிலில் வெள்ளி கதவு பொருத்தும் பணி ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**பள்ளி, கல்லூரிகள் மேம்படுத்துதல்**

*144*. அருள்மிகு பழனியாண்டவர் தொழில் நுட்பக் கல்லூரியில் உணவுக் கூடம் மற்றும் விடுதி கட்டும் பணி ரூ.3.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*145*. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி முதுநிலை வகுப்புகளுக்கு நூலகம், ஆய்வகம், வகுப்பறைகள், மாணவியர் வழிபாட்டிற்கு புதிய மண்டபம் கட்டும் பணி ரூ.3.29 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*146*. குழித்துறை, ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரியில் மாணவியர் தங்கும் விடுதி கட்டும் பணி ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*147*. திருநெல்வேலி மாவட்டம், பாளையங் கோட்டை, அருள்மிகு காந்திமதி அம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதியதாக மாணவியர் தங்கும் விடுதி கட்டும் பணி ரூ.58.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*148*. மதுரை, திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நான்கு வகுப்பறைகள் ரூ.47 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

*149*. திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம், ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி வளாகத்தில் புதிய தார் சாலை அமைக்கும் பணி கல்லூரி மேம்பாட்டு நிதி மூலம் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*150*. கோவை, மருதமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான பள்ளியில் வகுப்பறைகள் கட்டும் பணி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*151*. நாகப்பட்டினம் மாவட்டம், மேலையூர், பூம்புகார் கலைக் கல்லூரியில் புதிய ஆய்வகம் கட்டும் பணி கல்லூரி மேம்பாட்டு நிதி மூலம் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*152*. திருவாரூர் மாவட்டம், திருத்துறைப் பூண்டி வட்டம், பேட்டை, அருள்மிகு பெரியநாயகி அம்மன் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வு கூடம் கட்டும் பணி, பள்ளிகள் மேம்பாட்டு நிதி மூலம் ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*153*. நாகப்பட்டினம் மாவட்டம், திருவெண்காடு, அருள்மிகு சுவேதாரண் யேஸ்வரர் திருக்கோயிலின் எஸ்.எஸ்.டி., மேல்நிலைப் பள்ளியில் ஆய்வுக்கூடம் மற்றும் குடிநீர் வசதி, பள்ளிகள் மேம்பாட்டு நிதி மூலம் ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*154*. திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், பண்பொழி அருள்மிகு திருமலைக் குமாரசாமி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டும் பணி பள்ளிகள் மேம்பாட்டு நிதி மூலம் ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

# காரைக்கால் அம்மையார்

புனிதவதி என்ற இயற்பெயர் கொண்ட காரைக்காலம்மையார், சோழ நாட்டின் கடற்கரைப் பட்டினமான காரைக்கால் நகரில் தனதத்தனார் எனும் பெருஞ்செல்வர்க்குப் பேரழகுமிக்க தவப்புதல்வியாகப் பிறந்தார்.



மணப் பருவம் வந்தவுடன், பரமதத்தன் என்பவருக்கு இவரை மண முடித்தார்கள். இல்லற வாழ்க்கையின்போது, இறைவனிடம் மாங்கனி பெற்றுத் தந்த தெய்வத்தன்மை கண்டு, அவரது கணவர் அச்சமும் மதிப்பும் கொண்டு நீங்க, அம்மையார் இளமையும் அழகும் துறந்து, பேய் வடிவம் பெற்று, நாடெங்கும் திரிந்து சிவபெருமானை இறைஞ்சி, அற்புதமான திருப்பதிகங்கள் பாடினார்.

இறுதியில், திருவாலங்காட்டில் சிவனடியின் கீழ், திருநடனம் கண்டு அதையே பாடும் பணியாகக் கொண்டு, அங்கேயே பேரானந்தப் பெருவாழ்வு பெற்றார்.

திருஞான சம்பந்தர், அப்பர் சுவாமி ஆகியோருக்கு முன்னரே, அதாவது பக்தி இயக்கத் தொடக்கக் காலமான (கி.பி.600–900) 6ஆம் நூற்றாண்டிலேயே முதன் முதலாய்த் திருமுறையை இசையுடன் பாடியவர் காரைக்கால் அம்மையார். பக்தியும் ஞானமும் நிரம்பிய இவர் பாடல்கள், சைவ சமயத்துப் பக்திப் பாடல்களுள் மிகவும் பழமையானவை.

தேவார ஆசிரியர்கள் மூவர் பதிகப் பெருவழியால் இறைவன் திருவருளைத் தமிழகமெங்கும் பரப்புவதற்கு முன்பாகவே, தம் பண்ணார்ந்த பாடல்களால் இறைவனைப் பாடிப் போற்றும் திருநெறிய தமிழ் நெறியை முதன் முதலாகத் தோற்றுவித்த அருளாசிரியர்.

இவர் பாடியருளிய அற்புதத் திருவந்தாதி, திருஇரட்டைமணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகிய திருப்பாடல்கள், பன்னிரு திருமுறை தொகுதியிலுள்ள பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பெற்றுள்ளன. பன்னிரு திருமுறை ஆசிரியர்களுள் காரைக்கால் அம்மையார் ஒருவரே பெண்பாற் புலவராவார்.

எலும்புக் கூடான பேய் வடிவத்தில் அமர்ந்த திருக்கோலத்தில், கையில் தாளமேந்திப் பாடுகின்ற நிலையிலுள்ள, அம்மையார் திருவுருவம் சிவாலயங்களில் கல்லிலும், செம்பிலும் அமைக்கப் பெற்று மக்களால் வழிபட்டு வரப் பெறுகிறது.

அம்மையார் அவதரித்த காரைக்காலில் அம்மையாருக்குத் தனிக் கோயில் ஒன்று உள்ளது. திருவருளால் மாங்கனி பெற்று அம்மையார் தெய்வத்தன்மை விளங்க நின்ற திருநாள் மாம்பழத் திருநாள் என்ற பெயரில் இன்றும் ஆனி மாதம் பௌர்ணமி நாளில் கரைக்காலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

–தென்னம்பட்டு ஏகாம்பரம்.

# திருக்கோயில் வழிபாட்டு முறை

மனம், மொழி, மெய் இவை மூன்றாலும் இறைவனை வழிபடலாம். சிவபெருமான் திருக்கோயிலை அடைந்து வலம் வந்தும், கை கூப்பியும் தொழுவது மெய் (உடம்பு)யால் வழிபடல். அப்படித் திருக்கோயிலை வணங்கி வரும்போது அருளாளர்களின் திருப்பாடல்களை வாயால் பாடுவது மொழி வழிபாடு. இவ்விரண்டு வழிபாட்டிலும் நினைவு வேறு கொள்ளாமல் சிவத் தியானத்தோடு இருப்பது மன வழிபாடு.

மனம், மொழி, மெய் இம்மூன்றும் ஒருங்கிணைந்து செய்யும் வழிபாடு சிறந்தது. மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றையும் வழிபாட்டிற்கு உரியன என்பர். மந்திரம் – மொழி, கிரியை –செயல் (மெய்); பாவனை – நினைவு (மனம்). இவற்றுள் ஒன்று குறைந்தாலும் அவ்வழிபாடு ஒரு வகையில் குறையுடையதே!

எனினும் முன்னோர்கள் எல்லாவற்றிற்கும் விதி விலக்குக் கூறிச் சென்றுள்ளனர். அப்பர் அடிகள் தம் திருஅங்கமாலையில்

"வாயே வாழ்த்து கண்டாய்
நெஞ்சே நீ நினையாய்
ஆக்கையால் பயனென்"

என மனம், மொழி, மெய்யால் இறைவனை வணங்கப் பாடினார். இப்படி மூவகை வழிபாடு முடியாதபோது மட்டும் மனத்தால் இறைவனை நினைந்து வழிபடலாம். உடல் நலக் குறைவு, முதுமை, தூய்மைக் குறைவு போன்ற சமயங்களில் மனத்தால் செய்யும் வழிபாடு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இறைவன் எல்லா இடங்களிலும் இருக்கின்றபோது திருக்கோயிலில் மட்டும் சென்று வழிபட வேண்டுமா? என்கிறார்கள் சிலர். காற்று எல்லா இடங்களிலும் நிறைந்திருந்தாலும் மின் விசிறிக்குக் கீழே நாம் ஏன் உட்காருகின்றோம்? எல்லா உறுப்புக்களும் சிறந்தவையே எனினும், கண்ணுக்கு ஏன் நாம் சிறப்பிடம் தருகின்றோம்? அதுபோல இறைவன் சிறந்து வெளிப்படும் இடமாக விளங்கி இறை வழிபாடு எப்போதும் இடை விடாமல் செய்யப்படும் திருக்கோயில் வழிபாடு நமக்குத் தேவையானது. பசுவின் பால் உடலெங்கும் பரவியிருந்தாலும் அது வெளிப்படும் இடம் பசுவின் மடியாகும். அதுபோல் இறைவன் அருள் வெளிப்படும் இடம் திருக்கோயில் எனக் கூறுவர்.

இதன் காரணமாகவே நம் தமிழர்கள் திருக்கோயில்களை நிறைய எழுப்பினர். வெளிநாடு சென்று வாழும் தமிழர்களும் அந்தந்த நாட்டில் தம் வழிபடு கடவுளர்க்குக் கோயில்கள் எழுப்பி வணங்கி வருகின்றனர்.

திருக்கோயில் வழிபாட்டிற்குச் சில விதிமுறைகளை வகுத்துள்ளனர். அதன்படி வழிபாடு செய்வது நல்ல பலன் தரும். கீழ்க் காணும் விதிமுறைகள் சிவாலயத்திற்கு உரியன.

1. மாலைச் சூரியன் மறைவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு நீராடி – விபூதி, உருத்திராக்கம் அணிந்து கோயிலுக்குச் செல்லவும் (தீக்கை பெற்றவர்கள் அனுஷ்டானம் செய்து செல்க).

மூன்று வேளையும் சிவ வழிபாடு செய்யலாம். இயலவில்லை எனில் மாலையில் கோயில் செல்க. காலையில் செய்யும் சிவ தரிசனம் இரவு செய்த பாவத்தை நீக்கும்; மதியம் சிவ தரிசனம் செய்தால் பிறந்த நாள் முதல்

–பேராசிரியர் அருணை பாலறாவாயன்

செய்த பாவம் போகும்; மாலைக் காலத்தில் செய்யும் சிவ தரிசனத்தால் ஏழு பிறவிகளில் செய்த பாவம் போகும் எனக் கூறப்பட்டுள்ளது.

2. சிவாலயம் செல்லும்போது தேங்காய், இனிய வாழைப்பழம், கற்பூரம், பாக்கு, வெற்றிலை யோடு செல்க. இவை முடியாதபோது வேறு கனிகள் கொண்டு செல்லலாம். இவற்றை எடுத்துச் செல்லும்போது இடுப்பிற்கு மேல் இவற்றை உயர்த்திய கைகளில் கொண்டு செல்ல வேண்டும்.


ஏதும் எடுத்துச் செல்ல இயலாதபோது மலர், இலை கொடுத்து வணங்கலாம். அதுவும் முடியவில்லை என்றால் பெருமான் சந்நிதியில் உள்ள குப்பைகளை அகற்றி தூய்மை செய்யலாம். சிவாலயத்திற்கு வெறுங்கையோடு செல்வது கூடாது. தேங்காய் உடைப்பது நம் ஆணவத்தைப் போக்குவதைக் குறிக்கும். தேங்காய்க்கு மேல் உள்ள பச்சை மட்டை மாயை; உரித்து எடுக்கும் நார் கன்மம்; சந்நிதியில் உடைக்கும்போது உள்ள ஓடு ஆணவம்; உள்ளே இருக்கும் வெள்ளைத் தேங்காய் இறைவனை அடையும் தூயசித்தம் என்று கிருபானந்த வாரியார் அவர்கள் விளக்கம் அளிப்பார்.

கற்பூரம் எரிப்பது ஆன்மா – பரமாத்மாவோடு கலப்பதைக் குறிக்கும். வெள்ளைக் கற்பூரம் – சுத்த சத்துவ குணமுள்ள ஆன்மா; நெருப்பு – ஞானக்கினி; தீபமாக எரிவது – ஆன்மா சிவகரணம் பெற்று நிற்பது; இறுதியில் கரைந்து போவது – ஆன்மா உடல் நீங்கி இறைவனோடு ஒன்றுபடுவது.

வாழைப்பழம் போன்ற கனிகள் – நம் ஆன்மாவின் கனிந்த நிலைமைக் காட்டுவது.

வெற்றிலை – மலர், காய், கனி ஏதும் அற்ற வெற்று இலை போல் வேறு ஏதும் நாடாத வெறுமை நிலையுள்ள மனத்தைக் குறிக்கும்.

பாக்கு – எல்லாவற்றையும் உவர்ந்து ஒதுக்கிய எண்ணம். எதிலும் சுவையில்லாத தன்மை இவற்றை குறிக்கும் அடையாளம்.



வெற்றிலை, வேள்விக் குண்டத்தையும், பாக்கு அதில் இடும் அவிசுவையும் குறிப்பதாகவும் கூறுவர்.

வெற்றிலை பாக்கு, தம் நிறம் மாறிப் புதுவண்ணம் பெறல் போல் உயிர் சிவ வண்ணமாதலைக் குறிக்கும்.

3. திருக்கோயிலுக்குச் செல்லும்போது முதலில் திருக்கோபுரத்தைத் தாழ்ந்து வணங்க வேண்டும். சைவ நூல்களில் கோபுரம் 'தூல லிங்கம்' எனப்படுகிறது.

4. கோபுரத்துள் சென்றதும் முதலில் விநாயகரையும், அதன் பின்பு இடப தேவரையும் வணங்க வேண்டும்.

விநாயகப் பெருமானுக்குத் தலையில் குட்டிக் கொண்டு 'தோப்புக் கரணம்' போட வேண்டும். கைகளால் காதுகளைப் பிடித்துக் கொண்டு போடுவது தோப்புக் கரணம். 'தோர்பி; கர்ணம்' என்பதே தோப்புக் கரணமாயிற்று. தோர்பி – என்றால் 'கைகளினால்' என்று பொருள். கர்ணம் – காது. கைகளால் காதுகளைப் பிடித்துக் கொள்வதே தோர்பி; கர்ணம்.

5. அதன் பின்பு கோபுர வாயிலில் எழுந் தருளியுள்ள அதிகார நந்தி தேவரை வணங்கிச் சிவபிரானை வணங்குவதற்கு உள்ளே செல்ல அனுமதி கேட்டு அவர் உள்ளே செல்ல ஆணையிட்டதாகப் பாவனை

செய்து உள்ளே செல்ல வேண்டும்.

*6.* உள்ளே சென்றதும் சபா மண்டபத்தில் உள்ள ஆனந்த நடராசரின் தூக்கிய திருவடியை வணங்கிச் சிவபிரானின் சந்நிதியை அடைய வேண்டும்.

*7.* சந்நிதியில் ஆதி சைவரிடம் அல்லது பூசை செய்வோரிடம் தேங்காய் பழம் முதலியவற்றைக் கொடுத்து அருச்சனை செய்து கொள்க. அப்போது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் ஆகிய பஞ்ச புராணத் தமிழ்ப் பாடல்கள் ஓதவும்.

சிவாச்சாரியார் தரும் விபூதியைத் தாழ்ந்து இரு கையால் வாங்கிக் கொள்ள வேண்டும்.

பின்பு சிறிது தூரம் அகன்று விபூதியை நிலத்தில் சிந்தாமல் தலை அண்ணாந்து நெற்றியில் 'சிவ சிவ' எனக் கூறி அணிந்து கொள்ளவும்.

*8.* பின்பு சோமாஸ்கந்தர், உற்சவ மூர்த்தி, தட்சிணாமூர்த்தி, விநாயகர், முருகர் முதலானோரை வணங்கி வலமாகச் செல்க.

*9.* வலம் வரும்போது கைகளை வீசிச் செல்லல் கூடாது. கைகளை நெஞ்சுக்கு நேரே குவித்துச் சிவநாமம், பாடல்கள் இவை சொல்லிக் கொண்டு வலம் வர வேண்டும். இது உள் சுற்றான முதற் சுற்று.

*10.* இரண்டாவது சுற்று வரும்போது சிவனடியார்களான 63 நாயன்மார்களை வணங்கி வர வேண்டும்.

*11.* மூன்றாம் முறை வலம் வரும்போது சண்டேசுர நாயனார் சந்நிதி அடைந்து மூன்று முறை கைகொட்டிச் சிவபெருமான் தரிசன பலனைப் பெற்றதாகக் கருத வேண்டும்.

*12.* பின்பு அம்மையார் சந்நிதிக்குச் சென்று முன்போல வழிபட வேண்டும். முன்பு எல்லாம் அம்மையார் சந்நிதியில் விபூதியும், குங்குமமும் தரப்பட்டிருக்கின்றதாகத் தெரிகின்றது. இன்று குங்குமம் மட்டும் தரப்படுகிறது. தேவாரத்தில் 'குங்குமக் குழம்பு' என வருவதால் இப்போது போல் தூளாகக் குங்குமம் தரப்படாமல் சந்தனம் போல் குழம்பாகத் தரப்பட்டிருக்கிறது என உணர முடிகிறது.

*13.* பின்பு வலமாக வந்து கொடிமரத்தின் முன்பாக வடக்கு நோக்கி அருகே ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும்.

அட்டாங்க நமஸ்காரம் – தலை, கை இரண்டு, செவி இரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு ஆகிய எட்டு உறுப்பும் நிலத்தில் படியும்படி வணங்கல்.

பஞ்சாங்க நமஸ்காரம் – தலை, கை இரண்டு, முழந்தாள் இரண்டு – ஐந்துறுப்பும் நிலம் தோய வணங்குதல்.

கொடிக் கம்பத்தின் கீழே வீழ்ந்து வணங்கும்போது கிழக்கு, மேற்கு நோக்கிய சந்நிதியாய் இருந்தால் வடக்கே தலை வைத்தும் தெற்கு, வடக்கு நோக்கிய சந்நிதியாயின் கிழக்கே தலை வைத்தும் வீழ்ந்து வணங்குதல் வேண்டும்.

கால் நீட்டி வணங்கும்போது எந்தத் தெய்வச் சந்நிதியும் இருக்கக் கூடாது என்பதால் தான் கொடிமரத்தின் அருகே வீழ்ந்து வணங்கும்படி விதிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு, வடக்கு, இத்திசைகளை நோக்கிக் கால் நீட்டி வீழ்ந்து வணங்குதல் கூடாது.

ஆலயத்தில் கொடிமரத்தின் அருகே மட்டுமே வீழ்ந்து வணங்க வேண்டும். ஆலயத்துள் எந்தச் சந்நிதியிலும் கீழே விழுந்து வணங்கக் கூடாது.

இறைவனை வணங்கும்போது பெண்கள் தலைக்கு மேல் கை கூப்பி வணங்குதல் கூடாது. அதுபோல் 'அங்கப் பிரதட்சணம்' எனப்படும் முழு உடல் நிலம்பட வணங்கிச் சுற்றுதலும் பெண்களுக்கு உரியது இல்லை. எனினும் சிலர் இக்காலத்தில் அப்படிச் செய்து வருகின்றனர்.

கொடிமரத்தின் அருகே அமர்ந்து சிவ மந்திரம் கூறித் தியானிக்க வேண்டும்.

நீராடாமல் செல்லுதல், மிதியடியுடன் செல்லுதல், சமயச் சின்னங்கள் இன்றிச் செல்லுதல், வீண் பேச்சுப் பேசுதல், நகைத்தல், அசுத்தம் செய்தல், பலிபீடம், நந்தி இவற்றின் குறுக்கே செல்லுதல், ஒரு கையால் கும்பிடுதல், பிறப்பு, இறப்பு நேர்ந்து அதனால் தீட்டு ஏற்படும் நாட்கள் – இவை எல்லாம் சிவாலய தரிசனத்திற்குத் தடையானவை.

திருஅலகிடுதல் (பெருக்குதல்) திருமெழுக் கிடுதல் (நீரால் மெழுகுதல்) திருவிளக்கு ஏற்றல், பூசைக்கு மலர் பறித்துத் தருதல், இசை பாடுதல் போன்றவை ஆலய வழிபாட்டுக்கு உகந்தவையாகும்.

விளக்கினார் பெற்ற இன்பம்
மெழுக்கினால் பதிற்றி யாகும்
துளக்கில்நன் மலர் தொடுத்தால்
தூயவிண் ஏற லாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின்
மெய்ந்நெறி ஞான மாகும்
அளப்பில கீதம் சொன்னார்க்கு
அடிகள்தாம் அருளு மாறே!

என்னும் அப்பரடிகள் திருப்பாடல் ஆலய வழிபாட்டுப் பலன் கூறும்.

# உலகம் உய்ய உதித்த உடையவர்


எம்பெருமானாருக்கு பணிவிடைகள் செய்ய பல சீடர்கள் பக்தியுடன் இருந்தார்கள். உடையவரின் திருவடிகளைப் பற்றிய சீடர்கள் எண்ணிலடங்காது. இருப்பினும் மன்றுபுகழ்சேர் வடுகநம்பி என்ற திருநாமம் கொண்ட சீடரே உடையவரின் மனத்தை மிகவும் கவர்ந்தவர். இவர் கி.பி.1047ல் ஸர்வஜித் வருடத்தில் மாசி மாதம் புனர்பூசம் நட்சத்திரத்தில் அவதரித்தவர். இவரே உடையவரின் புகழ் பாடும் யதிராஜ வைபவம் என்ற நூலை இயற்றியவர்.

இராமானுஜரின் பாதுகைகளை (மிதியடி) தமது பூஜைக்குரிய பொருளாகக் கொண்டு வாழ்ந்தவர் வடுகநம்பி. ஒரு சமயம் உடையவரின் பூஜைப் பொருட்களை வடுகநம்பி எடுத்துவரும் பொழுது, உடையவரின் பாதுகைகளையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்து வந்தார். இதனைக் கண்ட உடையவர் வடுகநம்பியிடம் "பூஜை பொருட்களோடு என்னுடைய பாதுகைகளையும் சேர்த்து எடுத்து வந்து விட்டாயே," என மிகவும் வருந்தவும், வடுகநம்பி உடையவரை நோக்கி தங்களுடைய பூஜைப் பொருட்களோடு அடியேனின் பூஜைப் பொருளான தங்களுடைய பாதுகைகளையும் ஒன்றாக எடுத்து வந்ததில் தவறு இல்லையே, இரண்டும் பூஜைப் பொருட்கள் தானே, தேவரீரின் பெருமானைக் காட்டிலும் அடியேனின் பெருமானாகிய தங்களுக்கு என்ன குறை," என்றாராம்.

இன்னொரு சமயம் உடையவர் வடுகநம்பியை நோக்கி, ''அரங்கனின் திருக்கண்களின் அழகைப் பாராய்,'' என்று சொன்னபோது வடுகநம்பி உடையவரின் திருமேனியைப் பார்த்துக் கொண்டே, "என் குருநாதனைக் கண்ட கண்கள் மன்றொன்றினைக் காணாவே'' என்றாராம். இதனைக் கேட்ட இராமானுஜராகிய, எம்பெருமானார், "இப்படியும் ஒரு குருபக்தியா" என ஆச்சரியப்பட்டு மகிழ்ந்தாராம்.

எம்பெருமானார் அமுது செய்தருளிய பிரசாதத்தின் மிச்சத்தை உண்பது வடுகநம்பியின் வழக்கம். ஒருமுறை பிரசாதத்தின் மீதியை வடுகநம்பி உண்டுவிட்டு, தம் தலையிலேயே துடைத்துக் கொண்டாராம். இதனைப் பார்த்த இராமானுஜர் வடுகநம்பியைக் கோபித்துக் கொண்டார். தண்ணீரில் கையை அலம்பும்படிக் காண்பித்தார். மற்றொரு நாள் இதேபோன்று எம்பெருமானின் பிரசாதத்தின் மீதியை உண்டு விட்டு கைகளை நீரில் அலம்பினார். இதனைக் கண்ட உடையவர் வடுகநம்பியிடம் என்ன காரியம் செய்தாய் என்றார். உடனே வடுகநம்பி உடையவரிடம் ''தேவரீர் அருளியபடியே செய்தோம்,'' என்றார். உடனே உடையவர் வடுகநம்பியை பார்த்து உமக்கு தோற்றோம் என்றார்.

மற்றொரு நாள் ஸ்ரீரங்கத்தில் பெருமாள் திருவீதி எழுந்தருளுகையில், வடுகநம்பி சமையல்கட்டில் இருந்தார். உடையவர் வடுகநம்பியை அழைத்து, ''வடுகா வா, பெருமாளைச் சேவிக்க வா'' என்றார். அப்பொழுது அவர் உடையவருக்குப் பால் காய்ச்சி கொண்டிருந்தார். எனவே, அவர் உடையவரிடம், ''அடியேன்



**பெ.ராமநாதபிள்ளை,**
திருக்கோயில் செயல் அலுவலர், ஆனைமலை

பெருமாளைச் சேவிக்க வந்தால், எம்பெருமாளுக்கு பால் பொங்கிப்போமே," என்று சொல்லிவிட்டு பெருமாளைச் சேவிக்க வராமல், பால் காய்ச்சுவதிலே உறுதியாக இருந்தார். அவ்வளவு ஆழமான குருபக்தி உடையவர் வடுகநம்பி. மதுரகவி ஆழ்வார், நம்மாழ்வாரைத் தவிர தேவு, வேறு அறியேன் என்பது போல, வடுகநம்பியும் இராமானுஜரைத் தவிர வேறு தேவு இல்லை என்ற நிலையில் குருபக்தியுடன் இருந்ததால், எம்பெருமானார் வடுகநம்பியை, "நம்முடைய மதுரகவிகள்'' என்று அன்போடு அருளினாராம்.

ஒரு சமயம் இராமானுஜர் தன் சீடரோடு எழுந்தருளி இருக்கும்போது, வடுகநம்பியும் உடனிருந்தார். அப்பொழுது சீடரில் ஒருவர், "ஓம் நமோ நாராயணா" என்ற சொல்லவும், அவ்விடத்தை விட்டு வடுகநம்பி எழுந்து சென்று விட்டாராம். காரணம் கேட்டதற்கு, என் குருநாதரின் திருப்பெயரைத் தவிர பிறர் நாமத்தை நாம் விரும்புவதில்லை என்றாராம். எம்பெருமானாரே எனக்குத் தெய்வம் என்று இருந்தார்.

இதனையே ஸ்ரீமணவாள மாமுனிகள் கீழ்க்கண்டவாறு வடுகநம்பியை போற்றுகிறார்.

**"உன்னையொழிய ஒரு தெய்வம் மற்று அறியா**
**மன்னுபுகழ் சேர் வடுகநம்பி – தன்னிலையை**
**என்றெனக்கு நீ தந்தது ராசா வெந்நாளும்**
**உன்றனக்கே ஆட்கொள்ளு கந்து"**

இவ்விதமாக குருபக்தியில் ஈடு இணையற்றவராய் வடுகநம்பி திகழ்ந்தார்.

இதேபோல் இராமானுஜரின் மற்றொரு சகோதரியுடன் மகள் வரதவிஷ்ணு என்பவர், நடாதூராழ்வார் என்ற தாசநாமம் பெற்றவரும், இராமானுஜரின் சீடராக இருந்தவர். இவர் சாதிக்கு வைஷ்ணவத்தில் இடமில்லை என்ற உறுதியான நம்பிக்கை உடையவர்.

ஸ்ரீரங்கத்தில் நடாதூராழ்வான் ஒரு வைஷ்ணவரின் கையைப் பிடித்துக் கொண்டு, நடுவீதியிலே நடந்து சென்றபொழுது, ஒரு திருக்குலத்தில் உதித்த வைஷ்ணவர் எதிரில் வர, நடாதூராழ்வானின் கையைப் பிடித்துக் கொண்டு அழைத்துச் சென்றவர், அத்திருக்குலத்தாரின் சாதிப் பெயரைச் சொல்லி, "நீங்கி செல்" என்று சொல்லவும், இதனைப் பார்த்த நடாதூராழ்வார் மயங்கி விழுந்தார். மயக்கம் தெளிந்தவுடன், "இது ஏன்?'' என மற்றவர்கள் கேட்கவும், காவிரிக்கும், கொள்ளிடத்திற்கும் இடையே திருவரங்க நகரில் வாழ்கின்ற மகா புண்ணியவானையா "பறையன்" என்று சொல்வது, நான் தான் பறையன் என்றாராம். இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ வைஷ்ணவர்களிடையே சாதி கிடையாது என்பது தெளிவாகிறது.

எம்பெருமானார் பல நாட்கள் திருவரங்கத்தில் ஸ்ரீரங்கநாதனையும், ஸ்ரீரங்கநாச்சியாரையும் தரிசித்துக் கொண்டு இனிது வாழ்ந்து வரும் நாட்களில், திருமாலிருஞ்சோலை மலையில் அருளாட்சி புரியும் சுந்தரராஜ பெருமாளை வணங்கும் ஆவலில் திருமாலிருஞ்சோலைமலை வந்து சேர்ந்தார். திருமாலிருஞ்சோலைமலை பெருமாளுக்கு ஸ்ரீ ஆண்டாள் நூறுதடா (அண்டா) அக்கார அடிசிலும், நூறு தடா (அண்டா) வெண்ணையும் தளிகையாக கொடுக்க வேண்டும் என விரும்பினார். ஆனால், அது நிறைவேறவில்லை. அந்த விருப்பம் நிறைவேற வேண்டும் என்பதற்காக இராமானுஜர் நூறுதடா அக்கார அடிசிலும், நூறு தடா வெண்ணையும் தளிகை செய்து ஆண்டாளின் ஆசையை நிறைவேற்றினார். இதனால் ஆண்டாளுக்கு அண்ணனாகினார் ''பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே" என ஆண்டாளைப் புகழ்ந்து பாடும்போது இச்செய்தி வருகிறது. காலத்தால் பிற்பட்ட இராமானுஜர், காலத்தால் முந்திய ஆண்டாளுக்கு அண்ணனாகும் நிலையும் ஏற்பட்டது. தங்கையின் விருப்பத்தை நிறைவேற்றுவது அண்ணனின் கடமை என்பதால், ஆண்டாளின் விருப்பத்தை நிறைவேற்றிய இராமானுஜருக்கு "கோயில் அண்ணா" பட்டம் கிடைத்தது.

பின்னர் திருமாலிருஞ்சோலையினை நீங்கி, ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று,

ஆண்டாளை வணங்கி எழவும், மிகவும் உகந்த ஆண்டாள் எம்பெருமானாரை "கோயில் அண்ணா" என திருநாமமிட்டு அழைத்து மகிழ்ந்தார்.

தன் தாய்மாமனால் இராமானுஜர் என பெயரிடப்பட்டு, காஞ்சி வரதராஜப் பெருமானால் யதிராஜர் என அழைக்கப் பட்டு, ஸ்ரீரங்க பெருமானால் "உடையவர்" என சிறப்பிக்கப்பட்டு, திருகோஷ்டியூர் நம்பிகளால் எம்பெருமானார் என மதிக்கப்பட்டு, சரஸ்வதி தேவியால் பாஷ்ய காரர் என அழைக்கப்பட்டு, ஆண்டாளுக்கு அண்ணனாகவும், செல்லப் பிள்ளைக்கு தந்தையாகியும் திருவேங்கடமுடையானுக்கு மாமனாராகியும் எல்லையில்லா பெரும் புகழுடன் விளங்கினார்.

பெருமாள் நம்மாழ்வாரைத் தன் திருவடி நிலையாய் கொண்டார். நம்மாழ்வார் இராமானுஜரைத் தன் திருவடி நிலையாய் கொண்டார். இராமானுஜர் முதலி யாண்டானைத் தன் திருவடி நிலையாய்க் கொண்டார். எனவே, பெருமாள் சந்நிதியில் ஸ்ரீசடகோபம் ஸாதித்தருளி வணங்க வேண்டும். நம்மாழ்வார் சன்னிதியில் ஸ்ரீ இராமானுஜர் சாதித்தருள வணங்க வேண்டும். இராமானுஜர் சந்நிதியில் ஸ்ரீ முதலி ஆண்டான் சாதித்தருள வேண்டும்.

"பூ மகள்கோன் தென்னரங்கர்
பூங்கழற்குப் பாதுகமாய்
தாமகிழுந் செல்வச் சடகோபர்
தேன்மலர்ந்தாட்
கேயிந்தினிய பாதுகமாம் யைந்தை
இராமானுஜன்என
வாய்ந்தெனது நெஞ்சமே வாழ்"

என்ற பாடலில் (ஆர்த்தி ப்ரபந்தம் –19) நன்கு விளக்கப்படுகிறது.

எம்பெருமானாருக்கு பணிவிடைகள் செய்ய பல சீடர்கள் பக்தியுடன் இருந்தார் கள். அவர்களில் எழுபத்தி நான்கு ஸிம்ஹாஸ னாதிபதிகள் முக்கியமான வர்கள். அவர் களாலும், கூரத்தாழ்வான், முதலியாண்டான், நடாதூராழ்வான், எம்பார் (கோவிந்தர்), கிடாம்பியாச்சான், வடுகநம்பி கோமடத்து சிறியாழ்வான், அம்மங்கியம்மாள், உக்கலாழ்வான், உக்கலம்மாள், என்பவர்கள் முக்கியமான வர்கள் ஆவார்கள். (தொடரும்...)


12–வது ஆண்டு பயணம் | Special Care for Senior Citizens

திருக்கயிலாயம்

மானஸரோவர்
முக்திநாத்

16 / 20 நாட்கள் திருப்பயணம்
புறப்படும் தேதிகள் – ஜுன் 16,
ஆகஸ்ட் 14, ஆகஸ்ட் 28, செப்டம்பர் 13

பிரதோசம், பௌர்ணமி காலங்களில் திருக்கயிலாயம் – மானஸரோவரில் இருக்கலாம். 20 வருடம் அனுபவமுள்ள NEPAL ECO TREK INTERNATIONAL JYOTIADHIKARI-யுடன் இணைந்து 12 ஆண்டுகளாக திருகயிலாயம் – மானஸரோவர் முக்திநாத் – திருப்பயணத்தை நடத்துகின்றோம். திருக்கயிலை பயணத்திற்கு சம்பள ஆட்களை அனுப்புவதில்லை. 12 ஆண்டுகள் அனுபவம் உள்ள நாங்களே உங்களுடன் சேவை செய்ய வருகின்றோம். கட்டணத்தை குறைத்து வசதிகளை குறைப்பது இல்லை. பயண நாட்களையும் குறைப்பது இல்லை.

பூரி-கொல்கத்தா-கயா-காசி

ஹரித்துவார்-டெல்லி-ஆக்ரா
10 / 15 நாட்கள் மாதம் தோறும்

கேதார்நாத் - பத்ரிநாத் 12/16 நாட்கள்
கங்கோத்ரி யமுனோத்ரி ஜுலை முதல் மாதம் ஒரு குழு

மந்த்ராலயம்-நவபிருந்தாவனம்-3 நாட்கள்
சீரடி - பண்டரிபுரம் - 6 நாட்கள் மாதம்
தர்மஸ்தலம்-மூகாம்பிகை-4 நாட்கள் ஒரு குழு


அமர்நாத் பனிலிங்கம்
வைஷ்ணவதேவி, அமிர்தசரஸ்
இரயிலில் - 15 நாட்கள். விமானத்தில் - 9 நாட்கள்.
பனிலிங்கம் தரிசனம் செய்ய ஹெலிகாப்டர் வசதி உண்டு புறப்பாடு : ஜுலை 1


அந்தமான் – 5 நாட்கள்
இருவழி விமானம் ரூ. 17006/-
சிங்கப்பூர்-மலேசியா-6 நாட்கள் ரூ. 35600/-
பேங்காக்-பட்டயா-5 நாட்கள் ரூ. 27500/-
இலங்கை 4 நாட்கள் -17006/-
மாதம் ஒரு குழு புறப்படுகிறது

108 திவ்ய தேசங்கள் தரிசனம் செய்து வர ஏற்பாடு செய்து தருகின்றோம்.

தாங்கள் விரும்பும் சுற்றுலாக்கள் விரும்பும் தேதியில் நடத்தி தருகின்றோம்.

மனோகர் டிராவல்ஸ்

ஈரோடு - 1 செல் : 94433-80150
e-mail : manohartravvels@rediffmail.com
கைலாஷ் டிராவல்ஸ்
சென்னை - 3. செல்:94433-80154
www.manohartravels.com

# திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுகளுக்கு மடிக்கணினி (Lap Top) மற்றும் தொழில்சார்ந்த பட்டப்படிப்பிற்கான கல்விக்கட்டண நிதி உதவி

மேல்நிலைப்பள்ளித்தேர்வில் தேர்ச்சிபெற்று, பெற்ற அதிகபட்ச மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுகள் முதல் 90 பேருக்கு மடிக்கணினிகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், கடந்த 15.5.2010அன்று வழங்கினார்கள்.

2009–2010ஆம் ஆண்டு நடைபெற்ற இந்துசமய அறநிலையத்துறை மானியக்கோரிக்கையின் போது, மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர், "மேல்நிலைப்பள்ளித்தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்கல்விப்பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுகளுக்கு, அவர்கள் +2 பொதுத்தேர்வில் பெற்ற அதிகபட்ச மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில், முதல் 100 மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும்" என்றும், "அரசு மற்றும் அரசு நிதி உதவிப்பெறும் கல்வி நிறுவனங்களின் தொழில்சார்ந்த



பட்டப்படிப்பு (Professional Courses) பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுகளுக்கு, முதல் ஆண்டு கல்விக் கட்டணத்தில் 25 சதவிகிதத் தொகை நிதி உதவியாக வழங்கப்படும் என்றும் அறிவித்தார்கள்.

இந்த நலத்திட்ட அறிவிப்புகளின்படி மேல்நிலைப் பள்ளித் தேர்வில் தேர்ச்சிபெற்று உயர்கல்வி பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுகளுக்கு அதிகபட்ச மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் மடிக்கணினி வழங்கவும், அரசு மற்றும் அரசு நிதி உதவிப்பெறும் கல்வி நிறுவனங்களின் தொழிற்சார்ந்த பட்டப்படிப்பு (Professional Courses) சேர்ந்து பயிலும் திருக்கோயிலின் பணியாளர்களின் வாரிசுகளுக்கு முதல் ஆண்டு கல்விக்கட்டணத்தில் 25 சதவிகிதத் தொகை வழங்கவும் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

அதன்படி தலைமைச் செயலகத்தில் கடந்த 15.5.2010 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் +2 தேர்வில் தேர்ச்சிபெற்று அதிகபட்ச மதிப்பெண்கள் பெற்ற 90 மாணவர்களுக்கு மொத்தம் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் மடிக்கணினி களும், 3மாணவர்களுக்கு முதலாம் ஆண்டு கல்விக்கட்டணத்தில் 25 சதவிகித தொகையாக நபர் ஒருவருக்கு ரூபாய் 5,325/– நிதி உதவியும், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.


இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. க.முத்துசாமி இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத் இ.ஆ.ப. கூடுதல் ஆணையர் (பொது) திரு. தி.ஜெயராமன், கூடுதல் ஆணையர் (விசாரணை) இரா. சுப்பிரமணியன், இணை ஆணையர் (தலைமையிடம்) திருமதி ந.திருமகள், இணை ஆணையர் (திருப்பணி) திருமதி. சி. ஹரிப்பிரியா, துணை ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிலையங் கள்) திருமதி. இரா. வான்மதி உள்ளிட்ட துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# மங்கையர்க்கரசியார்

மங்கையர்க்கரசியார் பழையாறையில் மணிமுடிச் சோழன் மகளாய்த் தோன்றி, மதுரை மாநகரைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த பாண்டிய மன்னன் நின்றநீர் நெடுமாறனை மணந்து வாழ்ந்தவர்.

தொண்டை நாட்டிலே திலவதியாரும், பாண்டிய நாட்டிலே மங்கையர்க்கரசியாரும் அருள் வழிகாட்டி, நாட்டை நல்லாற்றுப் படுத்தியிராவிடின் சைவ நெறியின் வரலாறே வேறுவிதமாக அமைந்திருக்கும்.

நாடெங்கும் சமணமும், பௌத்தமும் பெரும் செல்வாக்குப் பெற்று வளர்ந்த ஏழாம் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்தவர் மங்கையர்க்கரசியார். பாண்டிய நாட்டில் சைவம் நிலையிழந்து கிடந்ததைக் கண்டு அரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் வருந்தினர். அவ்விருவரது அழைப்பினால், நாளும் தமிழிசையால் சைவம் பரப்பிய திருஞானசம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளினார். அவரது வரவு கண்டு சமணரும், மன்னரும் கலங்கி நிற்க, அரசியாரும் அமைச்சரும் இனித் தென்னவனும், நாடும் திருந்திவிடும் என மகிழ்ந்திருந்தனர்.



சமணர் இழைத்த கொடுமைகளை எல்லாம் சம்பந்தர், ஆலவாய் சொக்கன் அருளால் வென்று, சைவத்தின் புகழை நிலை நாட்டினார்.

சிவனருளால் மன்னர் கூனுடன் வெப்பு நோயும் நீங்கப் பெற்று சைவனானான். மன்னனைப் பின்பற்றி மக்களும் சைவ நெறியைப் பின்பற்றினர். பாண்டிய நாட்டிலே சைவம் மறுமலர்ச்சி பெற்றது.

“மானின்னேர் விழி மாதராய்வழுதிக்கு மாபெருந்தேவி” எனத் திருஞான சம்பந்தரால் முன்னிலைப்படுத்திப் பாடப் பெற்ற பேறு பெற்றவர் இப்பெருமகள் ஒருவரே. “மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்” என்றும், “தென்னர்குல பழி தீர்த்த தெய்வப் பாவை” என்றும், சேக்கிழாரும் போற்றிப் புகழ்கின்றனர்.

சைவம் காத்த பாண்டிய நாட்டரசி மங்கையர்க்கரசியின் புகழ், சைவமும் தமிழும் உள்ளளவும் நிலை பெற்று நிற்கும்.

– **தென்னம்பட்டு ஏகாம்பரம்.**

திருமூலர், திருமந்திரத்தில் "தன்னை அறியும் அறிவே அறிவு" என்கிறார்.

வடலூர் வள்ளற் பெருமானாரும் "ஒன்றே சிவம் தான் என அறிந்த அறிவே தகும் அறிவு" எனக் கூறியுள்ளார்.நாம் அறிவென்று எதை நினைத்துக் கொண்டிருக்கிறோமோ அது தகும் அறிவல்ல; தகாத அறிவென்றாகிறது. ஆகையால், ஒருவன் தன்னையே சிவமென்று அறிவது தான் அறிவின்பால்படுமென்று ஆகிறது. இதிலிருந்து ஒருவன் தன்னை அறியவில்லையென்றால் அறிவை அறியவில்லை என்றும், தன்னை அறியா விட்டால் அறிவை அறிய முடியாதென்றும் அறியக் கிடக்கிறது.



வள்ளலார்,

**"தன்னை அறிந்து இன்பமுற**
**வெண்ணிலாவே - ஒரு**
**தந்திரம் நீ சொல்ல வேண்டும்**
**வெண்ணிலாவே''**

# அறிவே ஜோதி

என்று தன்னை அறிதலையே குறிப்பிட்டுள்ளார்.

வள்ளற் பிரானும் "ஆர் நீ என்று எதிர்வினவில் விடை கொடுக்கத் தெரியாத அறிவிலியேன் பொருட்டாக" என்று தன்னை அறியாத அதாவது மெய்யறிவைப் பெறாத நிலையில் - தன்னை அறியாத நிலையில் - அறிவிலியேன் என்று தன்னைக் கூறிக் கொண்டுள்ளார்.

திருமூலர் கீழ்க்காணும் பாடலில்,

**"அறிவு அறிவென்று அங்கு அரற்றும் உலகம்**
**அறிவு அறியாமையை யாரும் அறியார்''**
என்கிறார்.

அறிவு, அறிவு என்று உலகத்தார் உளறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அறிவு இன்னதென்று உலகத்தார் அறிகிலரென்று கூறியுள்ளார். இப்படிக் கூறிய திருமூலர்பிரான் "அறிவு உதயம்" என்ற அதிகாரத்தில் அறிவை இன்னதென்று கீழ்க்கண்ட பாடலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

**"முன்னை அறிவின் செய்த**
**முதுதவம்**
**பின்னை அறிவினைப் பெற்றால்**
**அறியலாம்**
**தன்னை அறியும் அறிவே அறிவாம்**
**-அஃதன்றி**
**பின்னை அறிவது பேயறிவாகுமே"**

வள்ளற் பெருமானாரும், திருவருட்பா 6ஆவது திருமுறையில் பரசிவ நிலை என்ற அதிகாரத்தின் முதற்பாடலில்,

ஈரோடு மெய்வழி குழந்தைசாமி கவுண்டர்

"அருட்ஜோதித் தெய்வமெனை யாண்டு கொண்ட தெய்வம்" என்றும்,

4ஆவது பாடலில், தன்னை ஆண்டு கொண்ட தெய்வம் அறிவான தெய்வமென்றும் அதாவது அன்னிய மல்லாத தெய்வம் அறிவான தெய்வமென்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இதிலிருந்து அருட்ஜோதி தெய்வமேதான் அறிவான தெய்வமென்று ஆகிறது. இன்னும் சொல்லப் போனால் அருட் ஜோதியேதான் அறிவு என்று ஆகின்றதல்லவா!

காக புஜண்டர் பெருநூல் காவியம் 1000 என்ற நூலில் "அறிவே ஜோதி" என்று திட்டவட்டமாக யாதொரு சந்தேகத்திற்கும் இடமின்றி ஆணித்தரமாகக் கூறியுள்ளார்கள்.

தாயுமானவப் பெருமானும், தேஜோமயா னந்தம் என்ற அதிகாரத்தில்

''சத் ஆகி என் சித்தமிசை குடி கொண்ட அறிவான தெய்வமே தேஜோமயானந்தமே''

என்று அறிவைத்தான் தெய்வமாகக் கூறியுள்ளார். மேலும், அது தேஜோமயம் அதாவது ஜோதி மயமானது, பெருஞ்ஜோதி, அருட்பெருஞ்சோதி மயமான அறிவே தெய்வம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இதிலிருந்து வள்ளற்பிரான் குறிப்பிட்ட அருட்பெரும் ஜோதி அதாவது அருளோடு கூடிய பெரும் ஜோதி, நம் உள்ளமாகிய பெருங்கோயிலில் நின்று விளங்கும் அறிவாகிய ஜோதி என்று தெரிந்து கொள்ளலாம்.

மேலும் வள்ளலார், "அருட்ஜோதி ஆனேன் என்று அறையப்பா முரசு" என்று 6ஆவது திருமுறையில் கூறியுள்ளார்கள். வள்ளலார் தான் ஞான சொரூபியாக, அறிவு வடிவமாக ஆனதைத் தான் குறிக்கிறார்.

மேலும் கீழ்வரும் பாடலில்,

"கடல் கடந்தேன் கரையடைந்தேன்
கண்டுகொண்டேன் கோயில்
கதவு திறந்திடப் பெற்றேன்
காட்சியெல்லாங் கண்டேன்
அடர்கடந்த திருவமுது உண்டு
அருளொளியால் அனைத்தும்
அறிந்து தெளிந்து அறிவு உருவாய்
அழியாமை அடைந்தேன்''

என்று கூறியுள்ளார்.

இதனால் அழியாமை என்னும் சாவா நிலை, அறிவே உருவாகப் பெறுவது என்று தெளிவாகிறது.

திருமூலர் பிரானும்,

"அறிவு வடிவென்று அறியாத என்னை
அறிவு வடிவென்று அருள் செய்தான் நந்தி''

என்று தனது குரு பிரானாகிய நந்தீசர், தன்னை அறிவு சொரூபமென்று அறிவிக்க அறிந்து கொண்டதாகக் கூறியுள்ளார்கள்.

திருமந்திரம் பாடல் எண்.2358இல் அறிவுக்கு அழிவில்லை, ஆக்கமுமில்லை என்று திருமூலர் பிரான் கூறுகிறார். ஆகையால், அறிவு சொரூபம் அடைந்து விட்டால், ஞான தேகம் பெற்று விட்டால், நாம் சாகா நிலை அடைகிறோம். ஜோதி சொரூபமாவதென்றால் – அருட்ஜோதி ஆனேனென்று கூறுகின்ற நிலைகள் – அறிவு நிலையைத்தான் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஜோதி வணக்கம், ஜோதி வழிபாடு என்பது எண்ணெயும் திரியும் கூடிய விளக்கின் வெளிச்சமல்ல. இந்த நெருப்பும் ஐந்து பூதங்களில் ஒன்றாகிய ஜடப் பொருள்தானே! ஐந்து பூதங்களில் ஒன்றான நெருப்பு என்ற ஜடப் பொருளை வழிபட்டாலென்ன அல்லது ஐந்து பூதங்களில் மற்றொன்றான கல்லாகிய ஜடப் பொருளை வணங்கினாலென்ன? ஒரு வேறுபாடும் இல்லையே!

"இருள் அறுத்து என் உளத்து
எண்ணியாங்கு அருளி
அருள் அமுது அளித்த
அருட்பெரும்ஜோதி''

மேற்காணும் அருட்பெரும் ஜோதி அகவல் (319–320) அடிகளில், என் உள்ளத்து இருள் அறுத்து அருளிய – அறியாமை என்ற இருளை அகற்றிய அருட்பெரும் ஜோதி என்று வள்ளலார் கூறியுள்ளார்.


உள்ளத்து இருளை அதாவது அறியாமையைப் புற ஒளியாகிய வெளிச்சம் (Light) எவ்வளவு சக்தி வாய்ந்ததாக

இருந்தாலும் அகற்ற முடியாது என்பது கண்கூடு. அக இருளை அகற்றவல்லது ஒன்றேயாகும். ஆகவே, அருட்பெரும்ஜோதி என்று வள்ளலார் ஈண்டு குறிப்பிட்டுள்ளது அறிவையே அன்றிப் புற ஒளியாகிய விளக்கின் வெளிச்சத்தை அன்று. ஜோதி வழிபாடு என்று வள்ளலார் கூறுவது அறிவு வழிபாடேயன்றி விளக்கின் வழிபாடு அல்ல.

மேலும் ஜோதி வழிபாடு என்பது ஜோதியாகிய அறிவு வடிவான குருபரனை வணங்குதல், போற்றுதல், அவர் காட்டியருளும் வழியில் ஞானத்தையடைய படும்பாடு என்பது தான் பொருள். வாலறிவன் தயவால் தான், ஞானத்தைப் பெற முடியும். ஒரு செல்வந்தன் மனமிரங்கினால் தான் அவர் கொடுக்கும் பண உதவி கிடைக்கும். அஃதன்றிச் செல்வத்தை வணங்கினாலும், அறிவை வணங்கினாலும் பயன் இல்லை. அவற்றை உடையவரை வணங்கினால் பயன் பெறலாம். ஆகையால் விளக்கின் வெளிச்சத்தை வணங்குவதால் யாதொரு பயனும் இல்லை. அது வழிபாடு அல்ல. ஞானம் அடைய முடியாது. நம் குறிக்கோள் ஞானம் அடைதலே. இதுவே, ஜோதி வழிபாடு என்பதாகும்.

## ஆண்டாள்

திருமாலையே முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களைப் பாடியருளி, வைணவ நெறி பரப்பிய ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்களுள் ஆண்டாள் ஒருவரே பெண்பாற் புலவர்.



தமிழகத்தின் தென்பாண்டி நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாக வளர்க்கப் பெற்று, கோதை எனும் இயற்பெயர் பூண்ட ஆண்டாள், தந்தை நெறிப்படுத்திய வகையில், இறையருளால் ஞானம் விளையப் பெற்றவர். தம்மை முற்காலத்திய கோபியர்களில் ஒருத்தியாகவே கருதி, கண்ணனை அடைய நோன்பு நோற்றவர்.

தான் சூடிக் கொண்ட மாலையை இறைவனுக்கு அணிவித்ததை இறைவன் ஏற்க, அதுமுதல் ஆண்டாள் "சூடிக்கொடுத்த சுடர்கொடி" என்றழைக்கப்பெறுகிறார்.

சிறுவயதிலேயே கோதைக்கு, திருமால் மேல் அளவு கடந்த பக்தி இருந்தது. நாளடைவில் அந்தப் பக்தியே அரங்கன் மேல் காதலாக முதிர்ந்து, திருவரங்கப் பெருமானையே மணப்பது என்ற உறுதியுடன் இருந்தாள்.

திருவரங்கப் பெருமானின் ஆணைப்படி, உரிய காலத்தே திருவரங்கம் கோயில் கருவறைக்குள் மணப்பெண் கோலத்துடன் நுழைந்து, கண்ண பெருமானுடன் கலந்து விட்டார் என்று கூறுவர்.

பாவை நோன்பு என்பதை அடிப்படையாகக் கொண்டு இயற்றப் பெற்ற திருப்பாவை 30 பாசுரங்களும், கண்ணபெருமான் மீது கொண்ட காதற்பெருக்கிற் விளைந்த நாச்சியார் திருமொழி 143 பாசுரங்களுடன் சேர்ந்து மொத்தம் 173 பாசுரங்கள் ஆண்டாள் அருளிச் செய்தவை ஆகும்.

தமிழ் நாடெங்கும் மார்கழி மாதத்தில் வைணவத் திருக்கோயில்களிலும், வீடுகளிலும் இன்றும் திருப்பாவை, பக்திப் பரவசத்துடன் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. நாச்சியார் திருமொழியிலுள்ள பாசுரங்கள் திருமணம் முதலான சுபகாரியங்களில் பாடப் பெற்று வருகின்றன. ஸ்ரீவைஷ்ணவத்தின் ஆசாரியார் இராமானுஜர்க்கு ஆண்டாளின் திருப்பாவையில் மிகுந்த ஈடுபாடு இருந்தது. அந்த ஈடுபாட்டினால் அவர் "திருப்பாவை ஜீயர்" என்று புகழப்பெற்றார்.

–தென்னம்பட்டு ஏகாம்பரம்


# மானிடப் பிறவி

துர்லபம் த்ரயமேவைதத்
தேவாநுக்ரஹ ஹேதுகம்
மநுஷ்யத்வம் முமுக்ஷுத்வம்
மகாபுருஷ ஸம்ச்ரய

—ஜெகத்குரு ஆதி சங்கரர்

“மனிதப்பிறவி, மெய்ஞ்ஞானத்தை அடைய வேண்டும் என்ற ஆசை, மகா புருஷரான ஒரு மெய்க்குருபிரான் வாய்ப்பது இவையாவும் தெய்வத்தின் அனுக்கிரகத்தாலேயே கிடைக்கும் அரிய பெரிய வாய்ப்புகளாகும்” என ஸ்ரீ ஆதிசங்கரர் ‘விவேக சூடாமணி’ எனும் கிரந்தத்தில் அருளியிருக்கிறார்கள்.

முன் பிறவியில் செய்த நற்செயல்களின் பலனாகவே, இந்த அரிய மானிடப் பிறவி நமக்குக் கிடைத்துள்ளது. நமக்குக் கிடைத்த இந்த வாழ்வு இறைவனின் பெருங் கருணையால் கிடைத்ததே.



‘நாலுவகை யோனியிலும்,
எழுவகைத் தோற்றத்தும் நளினமாக
மேலுகந்த மானிடந்தான்
எடுப்பதே அருமை’

என்கிறது சிவானந்தபோதம்.

‘வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி’ என்பார் திருநாவுக்கரசு சுவாமிகள். ‘அரிது அரிது மானிடராய் ஆதல் அரிது, மானிடர் ஆயினும் கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது’ என்றார் ஔவைப் பெருமாட்டி.

புழுக்கம், வித்து, அண்டம் (முட்டை), சினை எனும் நால்வகை யோனி வழியாய்ப் பிறந்த தருக்கினம், ஜலம் வாழ் ஜந்து, ஊர்வன, பறப்பன, விலங்கு, மனு, அமரர் எனும் எழுவகை தோற்றப் படைப்பினில், மானிடப் பிறவியெடுத்து வந்தது மிகவும் அருமையே.

மனிதனை விட மேம்பாடான அல்லது ஈடு இணையான படைப்பு வேறு எதுவு மில்லை. இவனைக் காண உயர்ந்தது எதுவுமில்லை.

மனிதன் மகா மேன்மை யாகப் படைக்கப்பெற்றான். இறைவன் சிருஷ்டித்த படைப்புகளில் வைத்துப் பார்த்தால் இவன்தான் மகா உன்னதமானவன்.

இந்த உலகத்திலுள்ள சர்வ படைப் பினங்களையும் ஆயிரத்தெட்டு அண்டங் களையும் இவனது நன்மைக் காகவும் இவனுக்கு ஊழியம் செய்யவுமே இறைவன் படைத்தான்.

‘படைத்த படைப்புக ளெல்லாம்

தென்னம்பட்டு ஏகாம்பரம்

மனுவுக்காக... மனுவைப் படைத்தது தன்னையறிய' என்ற வேதமொழிக்கேற்ப, இம் மானிடத் தேகத்துள் உறையும் பரம் பொருளை அடையவே இப்பிறவி தரப்பெற்றது. மனிதனுக்கே இறைவனை அறியும் வல்லபம் உரியது.

மனிதவுரு இறைவனின் திருக்கோலமே. இரகசியத்தில் அவனது திருஉருவே. இவ்வுடம் பாலயத்துள் அவனைத் தவிர வேறொன் றுமில்லை. அவனைச் சந்திப்பதே நமது கடமையாக விதிக்கப்பெற் றிருக்கிறது.

ஆயினும், உயரிய மானிடப் பிறவியெடுத்த நம் வாழ்க்கை எப்படி போய்க் கொண்டிருக்கிறது?

பாகவதத்தில் சொல்லிய படி, மனிதனுக்கு பூரண ஆயுள் நூறு ஆண்டுகள் என்கிறார்கள். அதில் பாதி ஆயுள், இரவு தூக்கத்திலேயே கழிந்து போகிறது.

குழந்தைப் பருவத்துப் பேதைமையிலும், இளமைப் பருவக் கேளிக்கை விளையாட்டுகளிலும் இருபது ஆண்டுகளைக் கழிக்கிறான்.

முதுமைப் பருவத்தில், ஒன்றையும் செய்ய முடியாதவனாகி இருபது ஆண்டுகளைக் கழிக்கிறான். நரை, திரை, மூப்பினால் நலிந்து, ஒன்றும் செய்ய முடியாமல் தவிக்கிறான்.

பாக்கியுள்ள சொற்ப ஆண்டுகள் காமத்திலும், சோகத்திலும் செலவழிந்து போகின்றன.

## கபீர் அருள்வாக்கு

*தூங்கி இரவை இழந்தாய் விட்டது. சாப்பிட்டுப் பகலும் போயிற்று. பிறவி விலையற்ற வைரமாக இருந்தது. அதை சல்லிக்காசுக்கு மாற்றியாய் விட்டது.*

*கபீர் சொல்கிறார்: உயர்ந்த வீட்டைப் பார்த்து வீணில் பெருமை கொள்ளாதே. நாளையே தரையில் படுத்துக் கொள்ளல் வேண்டும்; மேலே புல் முளைத்துவிடும். (சாவாய்)*

*மனிதப்பிறவி பெறுவது அரிது. இந்த உடம்பு அடிக்கடி கிடைக்காது. கிடைத்த பிறவியை நன்கு பயன்படுத்திக் கொள்வாய்*

*தன் உயிரைப் பற்றி, அதன் அருமை பெருமையைப் பற்றி அறிந்தாயானால் அதைக் காப்பாற்று வாய். உயிர் போன்ற விருந்தாளி இரண்டாவது தடவை மீண்டும் கிடைக்காது. கிடைத்த பிறவியை நன்கு பயன் படுத்திக் கொள்வாய்.*

மனைவி, மக்கள் எனக் குடும்பத்தைக் காப்பாற்றுவதே வாழ்வின் இலட்சியம் என நினைத்துக் கொண்டு, அதற்காகவே அல்லும் பகலும் பாடுபட்டுத் தேய்கிறான்.

புலன் வழிபட்ட புல்லிய வாழ்வில் ஆயுள், நாள்தோறும் கரைந்து கொண்டே போகிறது. புல் நுனியில் தேங்கி நிற்கும் பனித்துளி போல, ஆயுள் சலித்துக் கொண்டே இருக்கிறது.

'நாள் என ஒன்றுபோல் காட்டி உயிர் ஈரும்
வாள் அது உணர்வார்ப் பெறின்'.

எனத் திருவள்ளுவர் பிரான் கூறியது போல, ஒவ்வொரு நாளாக வாழ்நாள் உருண்டோடிக் கழிந்து போய், நம் ஆயுட்காலம் ஒரு நாள் நிச்சயம் முடியப்போகிறது.

நாம் வாழும் வாழ்க்கையை ஐந்தொகை கணக்குப் போட்டு பார்த்தால் பகல் நேரம் பணம் சம்பாதிப்பதிலும், குடும்பத்தைப் பேணுவதிலும் கழிந்து போகிறது. இரவு நேரமோ தூக்கத்திலும், போகத்திலும் வீணே கழிந்து போகிறது.

ஆறறிவு பெற்றுள்ள மானிட வாழ்க்கை, ஐயறிவு

நுகர்ச்சியிலே மிருகங்களைப் போலவே புலனுகர்ச்சி வாழ்வாகவே வீணாகிப் போகிறதே.

'பாலனாய் உள்ளபோது விளையாட்டிலும், வாலிபத்தில் காமத்திலும், முதுமையில் துயரத்திலும் காலம் கழிந்து போகிறதே. தன்னைப் படைத்த பரம்பொருள்பால் சிந்தை செலுத்துவோர் யாருமில்லையே!' என வருத்தமுடன் பாடுகிறார் ஸ்ரீ ஆதி சங்கரர்.

இரத்தினச் சுருக்கமாய், தாயுமானவப் பெருந்தகை பாடியது போல், 'யோசிக்கும் வேளையில் உண்பதும் உறங்குவதுமாய்' வாழ்க்கை முடிந்து விடுகிறது.

நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? எங்கே போய்ச் சேர வேண்டும்? எதுவுமே தெரியாத நிலையில் மனித வடிவிலுள்ள ஐந்தறிவு விலங்குகளாய் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அடுத்த கணம் என்ன நடக்கப்போகிறது என்பதுகூட தெரியாத குருட்டுப் பயணமாகவே வாழ்க்கை போய்க் கொண்டிருக்கிறது.

இந்த மனிதப் பிறப்பில் தேட வேண்டிய பொருள், வீடு, வாசல், செல்வம், மனைவி, மக்கள் இவை மட்டுமல்ல. தேட வேண்டிய அதி அவசியமான பொருள் இன்னொன்றும் உண்டு.

'உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள், இந்தப் பிறப்பினால் அடையத் தக்க பிரயோசனத்தைக் காலமுள்ள போதே அறிந்து அடைய வேண்டும்' என்கிறார் வடலூர் வள்ளற்பெருமானார்.

மனிதவுரு இறைவனின் திருக்கோலமே. இரகசியத்தில் அவனது திருவுருவே. இவ்வுடம்பாலயத்துள் பரம்பொருள் வீற்றிருக்கிறது. எனவேதான், மனு நித்தியன் என்றும், அவன் அழிவதே இல்லையென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. மனு, நித்திய வஸ்து., பிரணவ சொரூபி. மற்ற படைப்புகள் எல்லாம் அழிந்தே போகும். இவன் சிரஞ்சீவியாய் வாழ வந்தவன் என்கிறது.

இந்த தேவ இரகசியத்தை அறியவே மனிதன் படைக்கப்பெற்றிருக்கிறான். இந்த மெய்ஞ்ஞானத்தை அறியவே, வேறெந்த ஜீவ ராசிகளுக்கும் இல்லாத அறிவு என்கிற மாணிக்கத்தை மனுவுக்கு வைத்து இறைவன் படைத்திருக்கிறான்.

மனித குலத்துக்கு மட்டுமே உரிய சொத்து மெய்ஞ்ஞானம். அதை அடைவதற்காகவே சிறப்புடைய ஞானேந்திரியங்களாகிய செவி, வாய், கண், பெற்று வந்துள்ளான்.

அவற்றைக் கொண்டு ஈசனாகும் சக்தி, மனிதனுக்கே உண்டு, மற்றைய எந்தப் படைப்பினங்களுக்கும் அச்சக்தி கிடையாது.

உடம்மையும், மனத்தையும் தாண்டி நம்மில் ஆன்மா என்ற ஒன்று உள்ளது. உண்மையில் நாம் உடம்போ, மனமோ அல்ல, நாம் என்றும் நித்தியமான அழியாத ஆன்மா. எங்கும் நிறைந்திருக்கும் இறைவனே, நம்மில் ஆன்மாவாக விளங்குகிறார்.

அறுதி உண்மையாகிய இறைவனை– உயிர்கள்தோறும் வீற்றிருக்கும் பரம்பொருளை, பிரணவ சொரூபியைத் தேகமெடுத்த மானிடர் அனைவரும் சென்று அடைவதே மானிடப் பிறவியின் இலட்சியமாகும். அதற்கான களமே இந்த உலக வாழ்க்கையாகும்.



| | |
|---|---|
| சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் | **திரு. ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,**<br>ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, தமிழ்நாடு அரசு<br>நுங்கம்பாக்கம் சென்னை – 600 034.<br>தொலைபேசி எண்: 28334811/12/13 |
| ஆசிரியர் | **கவிஞர். தென்னம்பட்டு ஏகாம்பரம், எம்,ஏ.,** |
| அச்சிடுவோர் | சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை–86<br>தொலைபேசி: 23450920/28117575 |



சேலம், அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயிலில் 16.05.2010 அன்று தங்கத்தேர் வெள்ளோட்ட விழா, தங்கத்தேர் மண்டபம், பணியாளர் குடியிருப்பு, அலுவலகக் கட்டடம், நவீன குளியல் அறைகள் முதலானவற்றின் திறப்புவிழா சிறப்பாக நடைபெற்றன. விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத் இ.ஆ.ப., வீரபாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வீரபாண்டி. ஆ.ராஜா, வணக்கத்திற்குரிய சேலம் மாநகராட்சி மேயர் திருமதி. ஜெ. ரேகா பிரியதர்ஷினி, சேலம் மண்டல அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.ப.ராஜா, திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. ஜோதி. எம்.பழனிச்சாமி உள்ளிட்ட அறங்காவலர்கள், உதவி ஆணையர் / செயல் அலுவலர் திரு. தா. வரதராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11



# அருள்மிகு காமாட்சி அம்மன் மற்றும் அருள்மிகு வைகுண்ட பெருமாள் வகையறா திருக்கோயில்கள்

**மாங்காடு, சென்னை-600 122.**

✆-044-2627 2053, 2649 5882.

**இருப்பிடம்:**

சென்னை நகருக்கு தென் மேற்கே சுமார் 20 கி.மீ. தொலைவில் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

## திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில்
காலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை.
திங்கள், புதன், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில்
காலை 6.00 மணி முதல் பகல் 1.30 மணி வரை.
மாலை 3.00 மணி முதல் இரவு 9.30 மணி வரை.

## முக்கிய திருவிழாக்கள்:

தை, ஆடி மாதங்களில், வெள்ளிக்கிழமை தோறும் 108 கலச அபிஷேகங்கள் – ஆடிப்பூரத்தில் 1008 கலச அபிஷேகம்.
புரட்டாசியில் நவராத்திரி பெருவிழா – புரட்டாசி பௌர்ணமியில் நிறைமணிக் காட்சி விழா ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

## தங்க ரத உலா

இத்திருக்கோயிலில் தினசரி நண்பகல் 12.00 மணி அளவிலும், மாலை 6.00 மணி அளவிலும் தங்க ரத உலா வெகு சிறப்பாக நடைபெறுகிறது. உபயக் கட்டணம் ரூ.1,500/– செலுத்தி, தங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்ள பக்தர்களை வேண்டுகிறோம்.

## அன்னதான திட்டம்

இத்திருக்கோயிலில் திங்கள், புதன், வியாழன், சனி ஆகிய நாட்களில் 100 நபர் களுக்கும், (உபயக் கட்டணம் ரூ.1,200/–) ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் 200 நபர்களுக்கும் (உபயக கட்டணம் ரூ.2,400/–) அன்னதானம் வழங்கப்படுகிறது. 80ஜி–யின்படி வருமான வரி விலக்கு அளிக்கப் பெற்றுள்ளது.
அன்பர்கள் அன்னதான திட்டத்தில் பங்கேற்க வேண்டுகிறோம்.

**திருக்கோயில் குறித்த விவரங்கள் அறிய இணைய தள முகவரி:**

www. mangadu kamakshi.com

அ.இளம்பரிதி, பி.எஸ்ஸி., எம்.ஏ., பி.எல்.,
துணை ஆணையர் / செயல் அலுவலர்.

டாக்டர் மணலி ஆர்.சீனிவாசன்.
பரம்பரை தர்மகர்த்தா.